பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 12 செவ்வாய்க்கிழமை 28.11.2023 கதிர் 382

# தமிழர் தாயகம் எங்கும் நேற்று பெரும் உணர்ச்சிப் பெருக்கு

## மாவீரர் நிகழ்வுகளில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்பு

பொலிஸாரின் கடும் கெடுபிடிகள் தடங்கல்களுக்கு மத்தியிலும் மாவீரர் நாள் நிகழ்வுகள் நேற்று தமிழர் தாயகம் எங்கும் பெரும் உணர்ச்சிப் பெருக்கோடு இடம்பெற்றன. நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்வுகளாக இவை பேரெழுச்சியைக் காட்டின.

துயிலுமில்லங்களும்போராளிகளின் எஞ்சியிருக்கும்நினைவிடங்களும் சிவப்பு, மஞ்சள் வர்ணக்கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு, ஒலிப்பேழைகள் இசைக்கப்பட்டு பல்லாயிரக் கணக்கானவர்களின் பங்கேற்புடன், நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

இனவிடுதலைக்காக தமது உயிர்களைதியாகம்செய்த ☞2

### இது ரகசியம் அல்ல!

விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க பதவியில் இருந்து தூக்கி எறியப்பட்டுவிட்டார். எதிர்பார்த்ததுதான். அவர் எப்படியும் பதவியிலிருந்து தூக்கப்படுவார், இலங்கைக் கிரிக்கெட் விவகாரம் கொஞ்சம்அடங்கட்டும்என்று ஆளும் தரப்பினர் காத்துக்கொண்டிருக்கிறார் என்று நவம்பர் 22 இந்தப் பத்தியில் சுட்டிகாட்டியிருப்பேன். அதேபோன்று விவகாரம் கொஞ்சம் அடங்கியதுமே ஆளைப் போட்டுத் தள்ளிவிட்டார்கள்.

ஜனாதிபதிக்குக் குடைச்சல் கொடுத்தால் அமைச்சர்களுக்கு என்ன நடக்கும் என்கிற தெளிவான செய்தி மற்றைய அமைச்சர்களுக்கும் இதன் மூலம் கொடுக்கப்பட்டுள்ளது. இத்தனைக்கும் ராஜபக்ஷக்களால் ஜனாதிபதிப் பதவி ரணிலுக்குப் ☞2

### 3 நாள் பயணமாக வடக்கே வருகிறார் இந்திய தூதுவர்

இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே புதன்கிழமை மூன்று நாள் பயணமாக வடக்கு மகாணத்திற்குச் செல்லவுள்ளார்.

இந்தப் பயணத்தின் முதன் நாளான நாளை, மதவாச்சியில் பாடசாலைகளுக்கான உதவித் திட்டங்களை கையளிக்கவுள்ளார். அதனையடுத்து மன்னார் பியர் பகுதிக்கும், பின்னர்திருக்கேதீச்வரர்ஆலயத்துக்கும் செல்லவுள்ளார்.

தொடர்ந்து முதன்நாளின் இறுதி நிகழ்வாக இரவு நேர விருந்துபசாரத்துடன் வடக்கு ☞9



### அத்திப்பட்டி கிராமத்தின் கதையே 50 ஆண்டுகளில் மன்னாருக்கும்

#### வினோ எம்.பி. சுட்டிக்காட்டு

நடிகர் அஜித் நடித்த 'சிட்டிசன' என்ற படத்தில் 'அத்திப்பட்டி' என்ற கிராமத்துக்கு நேர்ந்த கதியே இன்னும் 50 வருடங்களுக்கு பின்னர் மன்னார் தீவுக்கும் ஏற்படுமென வன்னி மாவட்ட பாராளுமன்றஉறுப்பினர் வினோநோகராதலிங்கம் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுஇடம்பெற்ற2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் சுற்றாடற்றுறை மற்றும் வனஜீவராசிகள், வனவிலங்குகள் பாதுகாப்பு அமைச் சுக்கான செலவுத்தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார் தீவில் கனிய மணல் அகழ்வு அல்லது கனிய மணல் அகழ்வாராய்ச்சி என்ற பெயரில் அவுஸ்திரேலியாவின்டைட்டானியம் சாம்ஸ் லிமிட்டெட் என்ற நிறுவனம் அங்கு அகழ்வுப்பணிகளை முன்னெக்கிறது.

மன்னார் தீவு மக்களின்விருப்பத்துக்கு மாறாக, அவர்களின் எதிர்ப்பையும் மீறி மன்னார் மாவட்டம் ஒரு காலத்தில் ☞8

### விளையாட்டுத் துறையின் புதிய அமைச்சராக ஹரீன் நியமனம்

இலங்கையின் புதிய விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சராக ஹரின் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகதெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னிலையில் நேற்று மாலை சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

சுற்றுலாத்துறை அமைச்சுக்கு மேலதிகமாக அவருக்கு இந்த அமைச்சுப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி நீர்ப்பாசனத்துறை அமைச்சராகச் ☞9

### கிழக்கு ஆளுநராக நஸீர் அஹமட் நியமிக்கப்படலாம் என சந்தேகம்

#### மான்னம்பெரம

நஸீர்அஹமட்கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்படலாம் என்ற சந்தேகம் காணப்படுகிறதென சுற்றாடற்துறை தொடர்பான நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அஜித் மான்னப்பெரும தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுஇடம்பெற்ற2024 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தில் சுற்றாடற்றுறை மற்றும் வனஜீவராசிகள், வனவிலங்குகள் பாதுகாப்பு அமைச்சுக்கானசெலவுத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறுகுறிப்பிட்டார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

வருடாந்தம் 4 ☞9

# உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு வெல்ல அரச ஆதரவு வன்முறைகள் நிறுத்தப்படவேண்டும்




## யஸ்மின் சூகா தெரிவிப்பு

இலங்கையில் அரச ஆதரவுடன் நடைபெறும் வன்முறைகள் நிறுத்தப்பட்டதால்தான் ஆட்சியாளர்களால் முன்னெடுக்கப்படும் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு பொறிமுறை வெற்றியடைமுடியும் என்று உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச செயற்திட்டத்தின்நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூகா தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமிழர் விடுதலைப் போராட்டத்தில் தங்கள் உயிர்களை இழந்தவர்களை நினைவுகூருவதற்கு தமிழ் குடும்பங்களுக்கு இருக்கும்உரிமைகளை இலங்கை அரசு தொடர்ந்தும் மீறிவருவதாக வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் இது தொடர்பில்விடுத்துள்ள அறிவிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

2009 மே மாதத்தில் உள்நாட்டுப்போரின் முடிவில் இடம்பெற்ற போர்க்குற்றங்களுக்கும் மனிதகுலத்திற்குஎதிரான குற்றங்களுக்கும் பொறுப்பானவர்கள் தொடர்பில் எவ்விதமான பொறுப்புக்கூறலையும் உறுதிப்படுத்துவதற்கு இலங்கை அரசு தவறியுள்ளமையானது, இலங்கையில் தண்டனையிலிருந்து விலக்களிக்கும் முறைமை மேலும் அதிகரித்துள்ளதையேகாட்டிநிற்கின்றது.

போர் முடிவடைந்திருந்தாலும், சிறிலங்காவிலும் வெளிநாடுகளிலும் வசிக்கும் தமிழர்கள் மீதான துன்புறுத்தல்கள் தொடர்ந்து கொண்டுதான் ☞8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பரிசளிக்கப்பட்ட தொடக்கத்தில் மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை ரணிலுக்குப் பெற்றுக்கொடுக்க முன்னின்று உழைத்தவர் இதே ரொஷான் ரணசிங்கவேதான். அரசியலில் நண்பர்களாவது, எதிரிகளாவது. அவ்வப்போது கூடப்பயணிப்பவர்கள் மட்டும்தான்.

ஜனாதிபதி பதவியில் இருந்து கோட்டாபய ராஜபக்ஷ தரத்தப் பட்டபோதும், ரணில் தற்காலிக ஜனாதிபதியாக நாடாளுமன்றத்தில் அடுத்த ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிட்டபோதும், ராஜபக்ஷக்களோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சாவோ ரணிலுக்குத் தேவையான ஆதரவை நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து பெறவில்லை. இதனால் பொது ஜன பெரமுன உறுப்பினர்கள் அதிர்ச்சியடைந்தனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் வீட்டுக்குள்ளேயே பேசிக் கொண்டிருந்ததைத் தவிர, ரணிலுக்கு வாக்களிக்கும் வகையில், கூட்டத்தை ஏற்பாடு செய்ய இடமோ, வசதியோ இருக்கவில்லை. ராஜபக்ஷக்கள் மறைந்திருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தொலைபேசியில் அழைத்து ரணிலுக்கு வாக்களிக்குமாறு கேட்டுவிட்டு வெளியே வரவே பயந்தனர். அப்படிப்பட்ட காலத்திலும் ரொஷான் அச்சமின்றிப் பொது ஜன பெரமுன உறுப்பினர்களை தனது வீட்டில் கூட்டி ரணிலுக்கு ஆதரவளிக்க வேண்டும் எனப் பகிரங்கமாக அறிவித்தார்.

அப்படியிருந்த ரொஷான்தான் இன்று ரணில் விக்கிரமசிங்கவைத் தீவிரமாக எதிர்க்கிறார். ரணில் ஒரு ஊழல்வாதி என்று தூற்றுகின்றார். ரொஷானுக்கு ஜனாதிபதிகள் குறித்து எந்த அச்சமும் இல்லை. மைத்திரிபால சிறீசேன பதவியில் இருந்தபோதும், எதிர்க்கட்சிகளே அவரை எதிர்க்கப் பயந்துகொண்டிருந்த காலத்திலும் நாடாளுமன்றத்திற்குள்ளும் வெளியிலும் அவரைப் பகிரங்கமாக எதிர்த்தவர் ரொஷான். அவருக்கு அச்சமில்லை. ஜனாதிபதிகளைப் பகைத்துக்கொண்டால் சிக்கல் என்கிற பயம் ரெஷானுக்கு எப்போதும் இருந்ததில்லை. அதன் விளைவாகவே அவர் இப்போது ரணிலையும் தனித்து நின்று எதிர்க்கிறார்.

ரணிலை எதிர்ப்பதினாலேயே ரொஷானும் ஒன்றும் புனிதர் ஆகிவிடமாடட்டார். அவர் மீதும் பல குற்றச்சாட்டுக்கள் உள்ளன. அவற்றில் மிக அண்மையில் வந்த ஒன்றும் முக்கியமானது. ஜேவிபி கட்சியின் பேச்சாளர் விஜித்த கேஹரத் இந்தக் குற்றச்சாட்டை எழுப்பியிருந்தார். வாகனங்களை இறக்குமதி செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளபோதும் ரொஷான் அண்மையில் சொகுசு வண்டி ஒன்றை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்துள்ளார் என்பதே அந்தக் குற்றச்சாட்டு. இந்தக் குற்றச்சாட்டை நிரூ-பிக்கப் போதுமான ஆதாரங்கள் இல்லை என்று பொலிஸ் பேச்சாளர் நிகால் தல்துவ தெரிவித்தாலும்கூட, அவருக்காகத்தான் அந்த வாகனம் இறக்கப்பட்டது என்பதே குற்றச்சாட்டு.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறவுகளுக்காக கண்ணீர்மல்ல, இதயம்கனக்கதறிய ழுதுவிடுதலை வேட்கையின் உளக்கிடையை உறவுகளும், நண்பர்களும் ஆற்றுப்படுத்தினார்கள்.

நேற்று மாலை 06.05இற்கு நினைவொலி எழுப்பபட்டு, 06.06 இற்கு அகவணக்கம் செலுத்தப்பட்டு, 06.07இற்கு ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மாவீரர் நாள் முறைப்படி நிறைவேற்றப்பட்டது.

### யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடங்களிலும் மாவீரர் நாள் நினைவேந்தல்கள் உணர்வுபூர்வமாக நடைபெற்றன.

முதலாவது கரும்புலி மாவீரர் மில்லரின் நினைவாக நெல்லியடி மத்திய கல்லூரியின் முன்பாக நினைவேந்தல் இடம்பெற்றுள்ளது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையிலான குழுவினர் இந்த நினைவேந்தலை மேற்கொண்டனர். இதன்போது ஈக சுடரேற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதனையடுத்து குறித்த குழுவினர் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முதல் மாவீரர் சங்கர் என்று அழைக்கப்படும் சத்தியநாதனுக்கு வல்வெட்டித் துறையிலுள்ள அவரது இல்லத்திற்கு முன்பாக ஈகைச்சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து குறித்த குழுவினர், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவிடத்தில் அருகில் மலர் தூவி, சுடரேற்றி உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தியதோடு, கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்துக்கு முன்பாகவும் அஞ்சலி செலுத்தினார்கள்.

இதேவேளை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நீண்ட காலத்தின் பின்னர் மாவீரர் நினைவேந்தலுக்கான வளைவு பிரதான வாயிலில் வைக்கப்பட்டு நினைவேந்தல் நிகழ்வுகள் பல்கலைக்கழக மாணவர்களின் பங்கேற்புடன் உணர்வு ரீதியாக நடைபெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மாவீரர் நினைவுத் தூபியில் மாலை 6.05 மணியளவில் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் நினைவேந்தல் இடம்பெற்றது.

இதன்போது மாவீரர்கள் நினைவாக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதோடு மூன்று மாவீரர்களின் தயார் ஒருவர் ஈகச்சுடரை ஏற்றிவைத்துள்ளார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சுற்றுவட்டப் பாதையில் மாவீரர் நாள் பதாகையொன்று காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. 'எம் மாவீரர்களின் தியாகவரலாறு வீண்போகக்கூடாது. ஆகவே விழித்தெழு இளம் தலைமுறையே.. போதை வஸ்துக்களில் இருந்தும், வன்முறைச் சமூகத்தில் இருந்தும் விழித்தெழுந்து, அறிவாயுதத்தை பயன்படுத்து' என்று அந்தப் பதாகையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

வேலனையில் நடைபெற்ற மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பை அடுத்து சாட்டி மாவீரர் துயிலுமில்லத்தில் ஒன்று திரண்ட பெருந்திரளான மக்கள் இன்னுயிர் ஈந்த தமது உறவுளுக்கு அஞ்சலி செலுத்தினர்.

அதேபோன்று நல்லூரில் தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்துக்கு முன்பாக மாவீரர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டு திறந்து வைக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த பகுதியில் யாழ்.மாநகர சபையின் முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணனின் பங்கேற்புடன் மாவீரர் ஒருவரின் தந்தை சுடர் ஏற்ற மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் முன்னாள் போராளிகளின் பிரசன்னத்துடன் மாவீரர்கள் நினைவேந்தல் உணர்வு ரீதியாக முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் காரைநகர் மூலக்கிளையின் ஏற்பாட்டில் மாவீரர்கள் தின நிகழ்வு இடம்பெற்றது. குறித்த அஞ்சலி நிகழ்வில் மாவீரர் பெற்றோரினால் பொதுச்சுடரேற்பட்டு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது. தொடர்ச்சியாக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் இலங்கை தமிழரசு கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதி கிளை தலைவருமான ஈஸ்வரபாதம் சரவணபவனால் அஞ்சலியுரையும் முன்னெடுக்கப்பட்டது.

வடமராட்சி- நெல்லியடி மாலிசந்தி பிள்ளையார் கோவில் முன்பாக, மாவீரர் நினைவாலயத்திலும் பெருந்திரளான மக்களின் பங்கேற்புடன் மாவீரர்கள் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

அதேநேரம், எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லம் இராணுவ கட்டுப்பாட்டில் இருக்கும் நிலையில், துயிலும் இல்லத்திற்கு அருகில் உள்ள காணி ஒன்றில் அஞ்சலி நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பிரதான ஈகச் சுடரினை கடற்கரும்புலி மாவீரர் தமிழினியின் தந்தையார் முத்துலிங்கம் சிவப்பிரகாசம் ஏற்றிவைத்தார். அதனை தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்கள், சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள் என பலரும் கலந்துகொண்டு தாயக விடுதலைக்காக உயிர் நீர்த்த ஏனையவர்களுக்கு சுடரேற்றி மலர் தூவி கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர்.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் இராணுவ கட்டுப்பாட்டில் இருக்கும் நிலையில் துயிலும் இல்லத்திற்கு முன்பாக உள்ள காணி ஒன்றில் அஞ்சலி நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மாவீரன் சபேசனின் தயாரால் ஈகச்சுடர் ஏற்பட்டு அஞ்சலிகள் நடைபெற்றன.

கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லத்தில் அகவணக்கத்தைத் தொடர்ந்து ஈகச்சுடரை மாவீரர்களான கப்டன் ரசியன், மேஜர் ரெஸ்ரார், மேஜர் வண்ணன் ஆகியோரின் தாயாரும் மற்றும் மாவீரர் குமரர் மற்றும் சந்திரன் ஆகியோரின் சகோதரியும் ஏற்றி நினைவேந்தலை ஆரம்பித்து வைத்தனர்;.

வல்வெட்டித்துறை கம்பர்மலையில் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முதல் மாவீரர் சங்கரது நினைவாலயம் முன்பாக மாவீரர் நினைவேந்தல் இடம்பெற்றுள்ளது.

அதேபோன்று, உடுத்துறை மாவீரர் துயிலுமில்லம், ஆகியவற்றிலும் பெரும் எண்ணிக்கையிலான மக்களின் பங்கேற்புடன் நினைவேந்தல் நிகழ்வுகள் அமைதியாக முன்னெடுக்கப்பட்டன.

### கிளிநொச்சி

கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் சரியாக 6.05 மணியளவில், பிரதான சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மூன்று மாவீரர்களின் சகோதரியும், தமிழீழ மாவீரர் பணிமனையின் பொறுப்பாளர் பொன் தியாகம் அவர்களின் புதல்வியுமாகிய அனுந்தி பிரதான சுடரினை ஏற்றி வைத்தார்.

பெருந்திரளான மக்கள் இதில் கலந்துகொண்டு தமது மாவீரர்களாகிப் போன தமது உறவுகளை நினைந்து கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர்.

'தாயக கனவுடன் சாவினைத் தழுவிய சந்தனப் பேழைகளே' என அனைவரும் ஒரே குரலாய் சங்கமித்து இன்னுயிர் ஈந்த தமது உறவுகளை நினைவுகூரும் உணர்வுபூர்வமான தருணம் நெகிழ்ச்சியை ஏற்படுத்துவதாய் அமைந்திருந்தது.

விசேடமாக, 2007ஆம் ஆண்டு வரையிலான மாவீரர்களின் பெயர்ப் பட்டியல் உள்ளடக்கப்பட்ட 'அ' தொடக்கம் 'ஈ' வரையான வலயங்களிலும், பெயர் விவரங்களற்ற மாவீரர்களுக்காக 'உ' வலயத்திலும் கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லம் தவிர்ந்த ஏனைய துயிலும் இல்லங்களுக்குச் செல்ல முடியாதவர்கள் விளக்கேற்றுவதற்காக 'ஊ' வலயத்திலும் பெருமளவானவர்கள் ஒன்றுகூடி அஞ்சலிகளைச் செலுத்தினார்கள்.

இதேபோன்று, தேராவில் மற்றும் முழங்காவில் ஆகிய மாவீரர்கள் துயிலுமில்லங்களிலும் பெருமளவிலான பொதுமக்கள் ஒன்றுகூடி தமது உறவுகளுக்கு அஞ்சலிகளைச் செலுத்தினார்கள்.

### முல்லைத்தீவு

தேவிபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் உணர்வு பூர்வமாக தாயகம் கோரிய உரிமைப் போரில் உயிர் நீத்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. இதன் போது பொதுச்சுடரினை மேஜர் ஆதிநிலவனின் தயார் ஏற்றி வைத்துள்ளார்.

துக்குடியிருப்பு பிரதேசத்தில் இரணைப்பாலை பகுதியில் விதைக்கப்பட்ட மாவீரர்களின் நினைவாக அதே இடத்தில் இம்முறையும் மாவீரர் நாள் நிகழ்வுகள் சிறப்பாக நினைவுகூரப்பட்டுள்ளது.

பொலிஸாரின் கெடுபிடிகளுக்கு மத்தியில் இரணைப்பாலை மாவீரர் துயிலும் இல்லத்தில் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு வளாகத்திற்கான வளைவு பதாதையில் மாவீரர் என்ற பெயர் பதிக்ககூடாது என நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவிற்க அமைய அங்கு மாவீரர் துயிலும் இல்ல பதாகை காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

இரணைப்பாலை மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களுக்கான பொதுச்சுடரினை முதல் விதைத்த மாவீரர் இசைஞானியின் தாயார் ஏற்றிவைக்க தொடர்ந்து சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட மாவீரர்களின் நினைவாக நினைவுச்சுடர்களை பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் ஏற்றிவைத்தனர்.

விசுவமடு மாவீரர் துயிலுமில்லத்தில் ஆயிரக்கணக்கில் கலந்து கொண்டுள்ள மக்கள் கண்ணீர் மல்க மலர் தூவி சுடரேற்றி உணர்வு பூர்வமாக உயிரிழந்த மாவீரர்களுக்கும் தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தினர்.

முல்லைத்தீவு கடற்கரையில் மாலை 6.05 மணிக்கு மணியோசை எழுப்பபப்பட்டு, அகவணக்கம் செலுத்தப்பட்டு பின்னர் பிரதான பொதுச் சுடரை கடற்கரும்புலி மேஜர் நிதர்சனின் தாயார் ஏற்றி வைக்க ஏனைய சுடர்களை மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களால் ஏற்றி வைக்கப்பட்டது.

தொடர்ந்து துயிலுமில்ல பாடலான தாயக கனவுடன் சாவினைத் தழுவிய சந்தன பேழைகளே எனும் பாடல் ஒலிபரப்பாகியது. இதன் போது மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் கலந்து கொண்டவர்கள் மிகவும் அமைதியாக கண்ணீர் மல்க மாவீரர்களை நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லத்தில் ஒன்று திரண்ட பெருந்திரளான மக்கள் இன்னுயிர் ஈந்த தமது உறவுளுக்கு அஞ்சலி செலுத்தினர்.

இரட்டைவாய்க்கால் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக இடம் பெற்றது. பொதுச்சுடரினை இரண்டு மாவீரனின் தந்தை தனபாலசிங்கம் ஏற்றிவைக்க ஏனைய உறவுகளுக்கு அவர்களது உறவுகள் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

இதனைவிடவும், களிக்காடு, கொக்குத்தொடுவாய், சுதந்திரபுரம், அளம்பில், வன்னிவிளான்குளம், முள்ளியவளை, ஆலங்குளம், ஆகிய மாவீரர் துயிலுமில்லங்களிலும், மாவீரர்களின் உறவினர்களால் சுடர் ஏற்றப்பட்டு உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

### மன்னார்

போரில் உயிர் நீத்தவர்களை நினைவுகூறும் மன்னார்-பேசாலை மக்களின் ஏற்பாட்டில் பேசாலை புனித வெற்றி நாயகி ஆலயத்தில் விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இதேநேரம், மன்னார் ஆட்காட்டிவெளி துயிலுமில்லத்தில் சிறப்புக் கரும்புலி லெப்டினன் கேணல் பூட்டோவின் தந்தையால் பிரதான நினைவுச்சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. அதேபோன்று மன்னார் பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலுமில்லத்திலும் பல்வேறு தரப்பினரின் பங்கேற்புடன் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

### வவுனியா

வவுனியாவில் பிரதான மாவீரர் துயிலும் இல்லம் அமைந்துள்ள ஈச்சங்குளம் பகுதியில் 561 ஆவது இராணுவ தலைமையகம் அமைந்திருப்பதால் அதற்கு அருகாமையிலுள்ள மைதானத்தில் நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. இதன் போது பிரதான ஈகச்சுடரினை மேஜர் உமாசங்கர், கப்டன் கஜலக்சன் ஆகியோரின் தாயாரால் ஏற்றி வைத்ததை அடுத்து நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

### கிழக்கு மாகாணம்

கிழக்குப் பல்கலைக்கழகத்திற்குள் அத்துமீறி நுழைந்த பொலிஸார் பல்கலைக்கழக பொங்குதமிழ்த்தூபி அருகில் இறந்த உறவுகளை நினைவு கூருவதற்கு கட்டப்பட்டிருந்த சிவப்பு, மஞ்சள் கொடிகளை பிடுங்கி மாணவர்களை அச்சுறுத்தியுள்ளனர்.

மேலும், பல்கலைக்கழக மாணவர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவார்கள் என்றும் மிரட்டியுள்ளனர். இதன் போது பாதணிகளுடன் சென்று புனிதமாக வழிபடும் நினைவுச் சின்னங்களையும் கழற்றிச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பில் மாவடிமுன்மாரி மாவீரர் துயிலுமில்லத்தில் மூன்று மாவீரர்களின் தயாரினால் பிரதான ஈகச்சுடர் ஏற்பட்டப்பட்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றது. இதன்போது, நீதிமன்றத் தடை உத்தரவு விதிக்கப்பட்டவர்களை குறித்த பகுதிக்குள் பிரவேசிக்கவிடாது பொலிஸார் தடுத்ததோடு, சிவப்பு, மஞ்சள் கொடிகளை அகற்றுமாறும், தீப்பந்தங்களை அகற்றுமாறும் சிட்டிகளில் மெழுகுதிரிகளை ஏற்றி அஞ்சலிக்குமாறும் வலியுறுத்தினார்கள். அத்துடன் கார்த்திகைப் பூக்களையும் அகற்றியதோடு ஒலிபெருக்கிகள் ஒலிப்பதற்கும் தடைகள் விதிக்கப்பட்டன. எனினும் அத்தனை தடைகளையும் கடந்து இரண்டாயிரம் பொதுமக்களின் பங்கேற்புடன் மாவீரர்கள் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

அதேபோன்று பெரும் கெடுபிடிகளுக்கு மத்தியில் மட்டக்களப்பு தரவை, மற்றும் வாகரை கண்டலடி துயிலுமில்லங்களிலும் மாவீரர்களுக்கான அஞ்சலி செலுத்தப்பட்டது. அதில் பெருந்திரளனவனர்கள் பங்கேற்றனர். இத்துயிலும் இல்லத்தின் அஞ்சலி நிகழ்வின் இடையே உட்புகுந்த பொலிஸார் அஞ்சலி நிகழ்வுக்கு இடையூறு ஏற்படுத்தினர்.

இதன்போது, அங்கு ஒன்று திரண்டிருந்த மக்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான சாணக்கியன் மற்றும் செ.கஜேந்திரன் உள்ளிட்டோருக்கும் பொலிஸாருக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

தாண்டியடி மாவீரர் துயிலுமில்லத்தில் நினைவேந்தலைச் செய்தவற்கு தடைகளை பொலிஸார் ஏற்படுத்தியதோடு கடுமையான பாதுகாப்பை பலப்படுத்தி வீதித்தடைகளையும் ஏற்படுத்தியிருந்தனர். இதனால் அங்கு நடைபெறவிருந்த நினைவேந்தல் முற்றாகத் தடுக்கப்பட்டது. இதனால் அங்கு செல்லவிருந்த மாவீரர்களின் உறவினர்கள் மாவடிமுன்மாரி மாவீரர் துயிலுமில்லத்துக்குச் சென்று அஞ்சலிகளை செலுத்தினர்.

அதேநேரம், அம்பாறையில் அம்பாறை கஞ்சிக்குடிச்சாறு துயிலுமில்லத்திலும் நினைவேந்தலுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட போதும் பொலிஸார் ஏற்படுத்திய தடைகள் காரணமாக அங்கும் மாவீரர்களுக்கான அஞ்சலியை பொதுமக்களால் மேற்கொண்டிருக்க முடிந்திருக்கவில்லை.

இதேவேளை, திருகோணமலையில், திருகோணமலை மாவட்டத்தில் ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் நினைவேந்தலுக்கான விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டபோதும் அப்பகுதிக்குள் பிரவேசிப்பதற்கு பொலிஸார் அனுமதி அளித்திருக்கவில்லை. விசேட அதிரப் படைகளும் பணிக்கமர்த்தப்பட்டு விசேட தடைகள் ஏற்படுத்தப்பட்டன.

இதனையடுத்து ஏற்பாட்டாளர்கள் நாவலடி சந்தி மற்றும் சம்பூர் காளி கோவில் ஆகிய பகுதிகளில் சுடர் ஏற்றி நினைவேந்தல்களைச் செலுத்தினார்கள்.

நீக்கப்பட்ட தடையுத்தரவுகள்

யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இடம்பெறும் மாவீரர் தின நிகழ்வுகளை தடைசெய்ய உத்தரவிட கோரி பொலிஸாரால் தாக்கல் செய்த மனு யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது. அதேபோன்று ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றில் பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட மாவீரர் தின தடை தொடர்பான கட்டளை நிராகரிக்கப்பட்டது.

அதேநேரம், முல்லைத்தீவில் உறவுகளை நினைவு கூருவதற்கு எவ்விதமான தடைகளும் இல்லை என முல்லைத்தீவு நீதிமன்றத்தினால் கட்டளை வழங்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவடிமுன்மாரி, தாண்டியடி, தரவை மாவீரர் துயிலும் இல்லங்களில் நினைவேந்தல் செய்வதற்கு அனுமதியளித்ததுடன் தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் சின்னங்கள் கொடிகள் படங்கள் பயன்படுத்தப்படக்கூடாது என்று மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது

சம்பூர் - ஆலங்குளம் பகுதியில் மாவீரர் நினைவேந்தலுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில், அதனை நீக்குமாறு கோரி மூதூர் நீதிமன்றில் சட்டத்தரணி டி.ரமணனால் இந்த நகர்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தலைமையிலான குழுவினர் முற்பட்டு வாதங்களை முன்வைத்ததை அடுத்து தடை நீக்கப்பட்டது.

காலைக்கதிர் Kalaikkathir

# தோட்ட உட்கட்டமைப்புக்கு சொட்டுக் கரண்டியில் நிதி

## எம்.உதயகுமார் குற்றச்சாட்டு



2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அமைச்சரவையில் உள்ள எல்லா அமைச்சுக்களுக்கும் நிதியை அகப்பையில் வழங்கிவிட்டு தோட்ட உட்கட்டமைப்புக்கள் வசதிகள் அமைச்சுக்கு மாத்திரம் சொட்டுக்கரண்டியில் நிதி வழங்கப்பட்டுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.உதயகுமார் குற்றச்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் நீர் வழங்கல் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சுக்கான செலவுத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

நமது நாட்டில் 12 மாவட்டங்களில் பறந்து வாழும் மலையக மக்களின் அபிவிருத்திக்காக உருவாக்கப்பட்ட தோட்ட உட்கட்டமைப்புக்கள் வசதிகள் அமைச்சின் அமைச்சர், செயலாளர் உட்பட அதன் அதிகாரி களுக்கு செயல்திறன் வெற்றி பெற எனது வாழ்த்துக்கள்.

நீர்வழங்கல் அமைச்சு தேசிய முக்கியத்துவம் மிக்க அமைச்சாக இருந்தாலும் மலையக மக்களைப் பொறுத்தவரையில் தோட்ட உட்கட்டமைப்புக்கள் வசதிகள் அமைச்சுதான் முக்கியத்துவம் மிக்க அமைச்சாக உள்ளது. அந்த வகையில் 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டில் இந்த அமைச்சுக்கு மட்டும் அநீதி இழைக்கப்பட்டு பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது.

அமைச்சரவையில் உள்ள எல்லா அமைச்சுக்களுக்கும் நிதியை அகப்பையில் வழங்கிவிட்டு தோட்ட உட்கட்டமைப்புக்கள் வசதிகள் அமைச்சுக்கு சொட்டுக்கரண்டியில் நிதி வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக இந்த அமைச்சுக்கு நிர்வாக செலவு என ரீதியில் 534 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் மலையக அபிவிருத்தி அதிகார சபைக்கு 23 மில்லியன் ரூபாவும் சௌமிய மூர்த்தி தொண்டமான் ஞாபார்த்த மன்றத்திற்கு 140 மில்லியன் ரூபாவும் மற்றும் அமைச்சின் ஏனைய செலவுகளுக்கு 371 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் அபிவிருத்தி என்ற அடிப்படையில் வெளிநாட்டு உதவிகள் மற்றும் உள்நாட்டு உதவிகள் என்ற அடிப்படையில் 5035 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அதிலே இந்திய அரசின் வீடமைப்புத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி 3900 மில்லியன் ரூபா. அந்த வகையில் பார்த்தால் அரசின் வரவு செலவுத்திட்டத்தில் இந்த அமைச்சுக்கு அபிவிருத்தி திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி 1135 மில்லியன் ரூபாவாகும் இதிலே பெருந்தோட்டப்பகுதிகளில் அடிப்படை, உட்கட்டமைப்பு வசதிகளுக்கு 100 மில்லியன் ரூபாவும் "ஸ்மார்ட்"வகுப்பறைகளை ஏற்படுத்த 310 மில்லியன் ரூபாவும் வீடமைப்புத் திட்டத்திற்கு 500 மில்லியன் ரூபாவும் இந்திய வீடமைப்புத்திட்டத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த 225 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன்படி பார்க்கும்போது நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட் கட்டமைப்புக்கள் வசதிகள் அமைச்சுக்கு ஒதுக்கப்படுள்ள மொத்த உள்நாட்டு நிதி ஒதுக்கீடுகளான 33784 மில்லியன் ரூபாவிலே வெறும் 1689 மில்லியன் ரூபா மட்டுமே தோட்ட உட்கட்டமைப்புக்கள் வசதிகள் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்படி கூறினால் இந்த அமைச்சு மொத்த உள்நாட்டு நிதி ஒதுக்கீட்டிலே 100 இற்கு 4.9 சதவீதம் மட்டுமே தோட்ட உட்கட்டமைப்புக்கள் வசதிகள் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இது தான் பாரபட்சம்.

நீர்வழங்கல் அமைச்சுக்கு அள்ளிவழங்கிய அரசு தோட்ட உட்கட்டமைப்புக்கள் வசதிகள் அமைச்சுக்கு கிள்ளிக்கொடுத்ததுள்ளது. நீர் வழங்கல் அமைச்சின் ஊடாகத் தோட்ட உட்கட்டமைப்புக்கள் வசதிகள் அமைச்சுக்கு தண்ணி காட்டப்பட்டுள்ளது. அதுமாத்திரமன்றி, இந்த வெளிநாட்டு உதவிகளின் அடிப்படையில் இந்திய வீடமைப்புத்திட்டங்களை முன்னெடுப்பதற்காக 3900 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இந்திய அரசால் 10000 வீடுகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ் முற்போக்கு கூட்டணியின் முயற்சியால் நோர்வூட்டில் நடந்த கூட்டத்திலே இந்திய பிரதமரால் இந்த 10000 வீட்டுத்திட்டம் அறிவிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தைத்தான் 3, 4 வருடங்களாக மாறி மாறி அறிவித்து வருகின்றனர். மலையகம் 200 நிகழ்விலும் இந்த 10000 வீட்டுத்திட்டம் தொடர்பாகவும் அறிவிக்கப்பட்டது.

இன்றுவரை இந்த 10000 வீட்டுத்திட்டம் ஆரம்பிக்கப்படாவிட்டாலும் தற்போது இதனை நீங்கள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்ததை வரவேற்கின்றேன். இனியும் தாமதிக்காது இந்த வீடமைப்புத்திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டும். 2024 ஆம் ஆண்டுக்குள் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். 3900 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் இந்த நிதியில் சுமார் 1500 வீடுகள் மட்டுமே கட்டப்படக்கூடிய சாத்தியம் உள்ளது.

மலையக மக்களுக்கான காணி உரிமை வழங்குவதற்காக 4 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக ஜனதிபதி தனது உரையில் அறிவித்துள்ளார். இது மகிழ்ச்சிக்குரியது. வரவேற்புக்குரியது. ஆனால் இந்த 4 பில்லியன் ரூபா தோட்ட உட்கட்டமைப்புக்கள் வசதிகள் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதா என்ற கேள்வியுள்ளது. அத்துடன் இந்த காணி உரிமை வழங்கும் திட்டம் என்ன நிலையில் உள்ளது என்பதை மலையக மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். அதாவது புதிதாக வீடுகளை அமைத்து அதற்கு காணி உரிமை வழங்குவீர்களா அல்லது வீடுகளை அமைக்காது காணி உரிமைகளை மட்டும் வழங்குவீர்களா என்று கேட்கின்றேன்.

முன்னாள் அமைச்சர் திகாம்பரம் தலைமையில் கட்டப்பட்ட வீடுகளை குருவிக்கூடுகள் எனப் பலர் ஏளனம் செய்தார்கள். அண்ணல் அப்போது கட்டப்பட்ட அதே 550 சதுர அடியிலான வீடமைப்புத்திட்டங்கள்தான் தற்போதும் முன்னெடுக்கப்படுகின்றன. முகவரியுடன் வீடுகளை கையளிப்பதையிட்டு மகிழ்ச்சி. - என்றார்.

(05)

# அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் நாட்டுக்காக சிந்தித்தே தீர்மானங்களை எடுக்கவேண்டும்

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த தெரிவிப்பு



கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருந்த இக்கட்டான சூழ்நிலையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்றார். வீழ்ந்துள்ள நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய திறமை ஜனாதிபதிக்கு உள்ளது. அதன் காரணமாகவே நாம் ஆதரவு வழங்கினோம். அனைத்து சந்தர்ப்பங்களிலும் நாட்டுக்காக சிந்தித்து தீர்மானங்களை எடுக்க வேண்டும் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

மாத்தளை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

நாடு சுதந்திரமடைந்து இதுவரையில் எந்தவொரு தலைவரும் சந்திக்காத பிரச்சினைகளுக்கு மத்தியில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்றார். நெருக்கடிக்கு மத்தியில் மிகவும் இக்கட்டான நிலைமையிலேயே அவரை நாம் ஜனாதிபதி பதவியில் அமர்த்தினோம்.

அன்று ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை போராட்டகாரர்களால் ஆக்கிரமிக்கப்பட்டன. அலரி மாளிகையும் ஆக்கிரமிக்கப்பட்டது. நாடாளுமன்றம் சுற்றிவளைக்கப்பட்டது. ஜனாதிபதியின் இல்லம் தீக்கிரையாக்கப்பட்டது. அந்த சந்தர்ப்பத்தில் அவருக்கு தங்குவதற்கு கூட இடமிருக்கவில்லை.

மேலும், டலஸ் அழகப்பெரும எமது நல்ல நண்பர். ஜனக்க பண்டார தென்னக்கோன் நாடாளுமன்றத்தில் இருக்கும் நெருங்கிய நண்பரும் கூட. நாம் நண்பர் அடிப்படையில் சிந்திக்கவில்லை. வீழ்ந்த நாட்டை எவ்வாறு மீண்டும் கட்டியெழுப்புவது, நெருக்கடிகளிலிருந்து எவ்வாறு மீள்வது என்பதையே நாம் சிந்தித்தோம். நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய அடுத்த தலைவர் யார் என்பதையே சிந்தித்தோம்.

அதன் காரணமாகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கினோம். தலைவர் என்பவர் சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டும்.

வீதிப்போரட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் மேற்கொள்வதன் மூலம் சிலவிடயங்களை செய்துவிட முடியாது. புதியதொரு நாட்டில் இருக்கிறோம்.

புதிய அரசியல் கலாசாரம் ஒன்றுக்குள் இருக்கிறோம் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நாட்டின் நன்மை கருதி சரியான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும். எமது மாற்றம் நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

அவ்வாறு இல்லை என்றால் கடந்த வருடம் மே, ஜூலை மாதம் காணப்பட்ட மோசமான நிலைமை போன்று நாடு மீண்டும் தள்ளப்படுவதைத் தடுக்க முடியாது. - என்றார்.

(05)

# விபத்தில் காயமடைந்த இளம் பெண் உயிரிழப்பு

ஓட்டோ விபத்தில் படுகாயமடைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பளையை சேர்ந்த பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பளை, இத்தாவில் பகுதியை சேர்ந்த குணாளன் மதுசா (வயது 19) எனும் யுவதியே உயிரிழந்துள்ளார்.

கடந்த 22 ஆம் திகதி இத்தாவில் பகுதியில் ஓட்டோ மோதி விபத்துக்கு உள்ளானதில் படுகாயமடைந்த இந்த யுவதி பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு, சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

(05)

# ஆறு கிலோ கஞ்சாவுடன் இருவர் வென்னப்புவவில் வைத்து கைது



வான் ஒன்றில் 06 கிலோ கஞ்சாவை கொண்டு சென்ற இரண்டு பேரை வென்னப்புவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புத்தளம் - மாரவில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முதுகடுவ பிரதேசத்தில் வைத்து இந்த இருவரையும் கைதுசெய்துள்ளதாக வென்னப்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர்கள் 42 மற்றும் 27 வயதுடையவர்கள் என்பதுடன் அவர்கள் இருவரையும் மாரவில நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)

# வங்கியின் நிறைவேற்று அதிகாரி குளியலறையில் சடலமாக மீட்பு

பன்னிப்பிட்டிய, மாலபல்ல பிரதேசத்தில் மாடி வீடொன்றின் மேல்தள குளியலறையில் சில நாள்களுக்கு முன்னர் மர்மமான முறையில் உயிரிழந்ததாகச் சந்தேகிக்கப்படும் நபரொருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக கொட்டாவ பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் ஹோமாகம டென்ஸில் கொப்பேகடுவ மாவத்தையைச் சேர்ந்த சுதத் சிந்தக ரூபசிங்க (வயது 39) என்பவராவார். இவர் தனியார் வங்கியொன்றின் நிறைவேற்று அதிகாரி எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீட்டிலிருந்து கடும் துர்நாற்றம் வீசியதால் ஒருவர் 119 என்ற அவசர பொலிஸ் இலக்கத்துக்கு வழங்கிய தகவலின் பேரில் பொலிஸார் அங்கு சென்று அறையின் ஜன்னலை உடைத்து உள்ளே சென்று குறித்த நபரின் சடலத்தை மீட்டுள்ளனர்.

அந்த வீட்டில் இவர் தனிமையில் வசித்து வந்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

(05)

# பதுளை மாகாண பொது வைத்தியசாலை போதனா வைத்தியசாலையாக தரமுயர்வு

பதுளை மாகாண பொது வைத்தியசாலை போதனா வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அத்தோடு, சுமார் 2.26 பில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பேராசிரியர் பிரிவின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## புதிய நியமனம் உடன் தேவை

சந்தன தீபால் (சி.டி) விக்ரமரத்ன நான்கு சேவை நீடிப்புகளைத் தொடர்ந்து சனிக்கிழமையன்று ஒருவழியாகப் பொலிஸ் மா அதிபராக (IGP) ஓய்வு பெற்றார், இதுவரை அந்தப் பதவிக்குப் புதியவர் ஒருவர் நியமனம் செய்யப்படவில்லை. எந்தவொரு பொலிஸ்மா அதிபருக்கும் இல்லாத வகையில் இவருக்குத்தான் அதிகூடிய பதவி நீடிப்புக்கள் வழங்கபபட்டன.

விக்ரமரத்னவின் 61ஆவது பிறந்தநாளான மார்ச் 26 முதல் அவர் சட்டப்படி ஓய்வு பெறவிருந்த நிலையில், ஜூன் மாதம் அவருக்கு மூன்றாவது பதவி நீட்டிப்பு ஜனாதிபதியால் வழங்கப்பட்டது. அந்த நியமனம் உட்பட அவரது இரண்டு பதவி நீடிப்–புக்களை ஏற்றுக்கொள்ள அரசமைப்புப் பேரவை முன்னதாக மறுத்திருந்தது. அப்படியிருந்தும் இன்னும் புதிய காவல் மா அதிபர் ஒருவரை அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நியமிக்கவில்லை.

விக்ரமரத்ன 2019 ஏப்ரலில் பதில் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டார் மற்றும் நவம்பர் 25, 2020 அன்று பதவி நிலையில் உறுதி செய்யப்பட்டார். அவர் இந்த ஆண்டு மார்ச் மாதம் ஓய்வு பெறவிருந்தார், ஆனால் ஜனாதிபதியால் மூன்று மாத சேவை நீட்டிப்பு வழங்கப்பட்டது, அது ஜூன் 26 அன்று முடிவடைந்தது. விக்ரமரத்னவுக்கு இரண்டாவது மூன்று மாத கால நீட்டிப்பு வழங்கப்படும் வரை, பொலிஸ் திணைக்களம் சுமார் இரண்டு வாரங்கள் காவல் மா அதிபர் இல்லாமல் செயல்பட்டது. அவருக்கான இரண்டாவது பதவிக் காலம் ஜூலை 9 வழங்கப்பட்டது. இது அக்டோபர் 9 முடிவடைந்தது. பின்னர் அவருக்கு மூன்றாவது சேவை நீட்டிப்பு அக்டோபர் 13 அன்று மேலும் மூன்று வாரங்களுக்கும், நான்காவது சேவை நீட்டிப்பு நவம்பர் 03 அன்றும் வழங்கப்பட்டது. அந்த நீட்டிப்பு முடிந்ததும், அவர் ஓய்வு பெற்றார்.

இரண்டாவது மூன்று மாத கால நீடிப்புக்கான பரிந்துரைக்கு ஜனாதிபதி அனுமதி கோரிய போது, மேலும் நீடிப்பதற்காக புதிய பொலிஸ் மா அதிபரை நியமிக்க முடியாது என அரசமைப்புப் பேரவை தெரிவித்துவிட்டது.

ஒக்டோபர் 13 ஆம் திகதி ஜனாதிபதியினால் அவரது மூன்றாவது சேவை நீடிப்பு அங்கீகாரத்திற்காக அரசமைப்புக்கு அனுப்பப்பட்டது, ஆனால் 17 அன்று பேரவை அதை மறுத்துவிட்டது. சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையிலான அரசமைப்பு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மூன்றாவது நீடிப்பை வழங்க முடியாது என்று மீண்டும் வலியுறுத்தியது. . எவ்வாறாயினும், ஜனாதிபதி விக்கிரமசிங்க, சிசியின் மறுப்பைப் புறக்கணித்து, நீடிப்பை முன்னெடுத்தார். விக்ரமரத்னவின்நான்காவதுநீடிப்புதொடர்பானஜனாதிபதியின் பரிந்துரைக்கு நவம்பர் 3 ஆம் திகதியும் அரசமைப்புப் பேரவை அதே வழியில் பதிலளித்தது, ஆனால் ஜனாதிபதியிடமிருந்து அதே எதிர்வினையை எதிர்கொண்டது.

பொலிஸ் மா அதிபர் விக்ரமரத்னவின் சேவையை ஜனாதிபதி மூன்றாவது தடவையாகவும் பேரவையினால் நிராகரிக்கப்பட்டபோது அது சட்டபூர்வமானதா என பலர் கேள்வி எழுப்பினர். பேரவையி அதிகாரங்களை ஜனாதிபதி அபகரித்துள்ளாரா என சபாநாயகரிடம் எதிர்கட்சியினர் கேள்வி எழுப்பியபோது, ஜனாதிபதி மற்றும் பேரவை ஆகிய இரண்டுமே சரியானது என அவர் வேடிக்கையாக தெரிவித்தார். ஜனாதிபதி மற்றும் அரச சட்டத்தரணிகள் புதிய நியமனங்களுக்கு மட்டுமே பேரவையின் அனுமதி தேவை, நீட்டிப்புகளுக்கு அல்ல என்று வாதிட்டனர்.

விக்ரமரத்ன ஓய்வு பெறுவதற்கு முன்னர், பொலிஸ் மா அதிபரை சேவை நீடிப்பு வழங்குவதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கலாம் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் (BASL) தெரிவித்திருந்தது.


புதியபொலிஸ்மாஅதிபரைநியமிப்பத்தில்ஏன்இந்தத்தாமதம் என்பது தெளிவில்லை. அடுத்த நிலையில் இருக்கும் மூத்த பிரதிப்பொலிஸ்மாஅதிபர்களில்மூப்புநிலையில்முன்னணியில் இருப்பவரகள் மீது கடுமையான குற்றச்சாட்டுகள் உள்ளன. இந்தப் பிரச்சினை நிரந்தரமானது. அப்படியிருக்கும்போது புதிய பொலிஸ் மா அதிபரின் நியமன இழுபறிக்கு இதனையே தொடர்ந்து காரணமாகச் சொல்லிக்கொண்டிருக்க முடியாது. உடனடியாகப் புதியவர் ஒருவர் நியமனம் செய்யப்படவேண்டும்.

## கற்பகதரு என்னும் அற்புதம்

# பனையின் சுவையான பழம்



அங்கம் – 24



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

பழம் விற்கும் கடைகள் எல்லா இடங்களிலும் சாதாரண மாகவும் , பெரிய அளவிலும் இருப்பதைக் காணுகின்றோம். அங்கு எல்லாவி தமான பழங்களும் விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும். அப்படி வைக்கப்பட்டிருக்கும் பழங்கள் உள்நாட்டில் விளைந்த பழங்களாகவும், வெளி நாட்டி லிருந்து தருவிக்கப்பட்ட பழங்க ளுமாகவேதான் இருக்கும். அப் படி இருக்கும் பழங்களில் ஒரு பழம் மட்டும் இடம் பெற்றி ருக்காது. அந்தப்பழம் எந்தப்பழம் தெரியுமா ? அதுதான் எங்களின் மண்ணுக்குச் சொந்தமான பனம்பழம் . எங்கள் மண்ணின் பழம்.

எங்கள் அருகிலே கிடைக் கும் பழம். உணவாகப் பயன் படுத்தப்பட்டு வந்த பழம்.மரத்தில் ஏறிப்பறிக்காமலே கீழே விழுந்து கிடக்கும்பழம். ஆனாலும் அந்தப் பனம்பழம் பழக்கடைகளில் இடம்பெறாமல் இருக் கிறது என்பதை எண்ணக் கவ லைய–ாகவே இருக் கிறது.

ஆம் ! பனம்பழம்
விழுந்தவுடன் ஒருவாசம்
விழுந்தமறுநாள் ஒருவாசம்
சுடுகையில் வெடிவெடிக்க
தெருவையே
சுண்டியிழுக்கும் வாசம்
இழுத்து , மென்று
கடித்து , சப்பி
முறுக்கி, சூப்பிட
வேறெதையும் சுவைக்கமுடியாது
இத்தனைவகையாய்
சாப்பிட்டுவிட இயலாது
பேருந்திலோஇரயிலிலோ
போகிற போக்கில்
பழமாஇது
முகமெல்லாம்பூசி
கையெல்லாம்பிசுபிசுக்க
பற்களில்சிக்கும்நாரை
பார்க்கவேஅருவெறுப்பு
விரலிடுக்கில் தேக்கரண்டியைப்பிடித்து
இலகுவாய்வழித்து
பேசிக்கொண்டேசாப்பிட
முடியாதுதான்
உன்ன
உழைப்புத்தேவை
சிறிதாவது
நாகரிகச் சமூகம்
கீழாகவேபார்க்கிறது
அநாகரிகப்பழம்
தொப்
எழுந்தோடப்பார்த்தேன்

பனம்பழத்தை மற ந்திட நகரத் தார் மனமெண்ணினாலும் நகர மயமாகாத பகுதிகளில் இருப்பவர்கள் மனங்களைவிட் டுப் பனம்பழம் அகலாமலிருப் பது ஆரோக்கியமான நிலை என்றே சொல்லலாம்.

பனம்பழமானது நன்றாக முற்றி பழமாக வருவதற்கு முன் பாக வெட்டி கீழே இறக்கி விடுகிறார் கள். இப்படி நடப்பது இலங்கையில ல்ல தமிழ்நாட்டிலேயாகும்.கீழே இறக்கப்பட்ட அந்தக்காய்களை கூர்மையான கத்தியினால் விதைப் பகுதியை விட்டு விட்டு சுற்றி யிருக்கும் சதைப்பகுதி யினை வெட்டி எடுக்கிறார்கள். கத்தியினால் அறுத்தெடுக்கப்படும் பொழுது அது மூன்று பாகமாய் வருமாறு எடுப் பார்கள்.இப்படி வெட்டி எடுக்கும் பொழுது , பழ மொன்றுக்கு ஒரு கிலோ எடை யான சதைப்பகுதி கிடைக்கக் கூடியதாக இருப்பதாய் அறிகி றோம்.இவ்வாறு கிடைக்கும் சதைப்பகுதியை தமிழ்நாட்டின் கிராமப்பகுதிமக்கள் கொளக்கட்டை என்று பெயர் கொடுத்து மகி



விலைகொடுத்து வாங் கிச் சாப்பிட்டால்த்தான் அது நாகரிகம் என்னும் நிலை மேலோங்கி விட்டது. அதுதான் நவ நாகரிகம் என்று எண்ணும் மனப் பாங்கும் விரிவடைந்து விட்டது. பாரம்பரிய மாக உண் டுவந்த உணவுப் பழக்கங்கள் மெள்ள மெள்ளவாய் அகன்று போய்க் கொண் டிருப்பதையே காணமுடி கிறது. அந்த வகையில் பாரம்பரிய உணவாகவே இருந்துவந்த பனம்பழமும் உணவுப்பழக்கத்திலிருந்து அகன்று கொண்டே வருகிறது.பனம்பழம்என்பது எங்களின் நீண்ட கால தி னசரி யான உணவாகவே இருந்திருக்கிறது. இன்று பனம் பழம் என்று சொன்னால் , நகரத்தாருக்கும் அவர்களின் பிள்ளைகளு க்குமே தெரியாத ஒன்றாகப் , புரியாத பழாமாகவே இருக்கிறதுஎன்பதுதான்உண்மை யாகும்.பனம்பழத்தை சாப்பாடாக எடுப் பதையே அருவருப்பாய் எண்ணிடும் ஒரு நிலைமையும் காணப்படுகிறது. பன ம்பழத்தி னை அநாகரிகப் பழம் என்று எண்ணுகிறார்கள் என்பதை ம னவருத்தத்துடன் தமிழ் நாட் டைச் சேர்ந்த பேராசிரியர் ஒரு வர் ஒரு பாட்டாகவே ஆக்கி அளித்திருக்கிறார். அவர் தான் சென்னை கிறிஸ்தவக் கல்லூரி யில் தாவரவியல் துறையின் தலைவாராக விளங்கிய முனை வர் டி. நரசிம்மன் அவர்கள்.

எல்லாவித உடலுழைப் பையும் யதார்த்தத்தை எவ்வளவு பக்குவமாய் இங்கே கவி யாக்கி அளித்திருக்கிறார் அந்தப் பேராசிரியர்.பனம்பழத்தையே அநாகரிகப் பழம் என்று நோக்கும் நிலை இருக்கிறது என்பது ஏற்றுக் கொள்ளமுடியாமல் இருக்கிறதல்லவா!பச்சையாகவும் அதேவேளை நெருப்பில் சுட்டும் சாப் பிடும் வண்ணம் அமைந்தி ருக்கும் ஒரே பழம் பனம்பழம் மட்டு மே என்பது மனதிருத்த வேண்டியதாகும்.

பனம்பழம்என்பதுஅநாகரிகப் பழமாக நவநாகரிகத்தினுள் மூழ்கி இருப்பவர்கள் நினைத்தி ருக்கின்ற போதும் பனம்பழத்தி னை மற்றவ ர்கள் மறந்து விடாது இருக்கிறார்கள் என்பதையும் கருத்திருத்தல் வேண்டும். எங்கள் சொந்தப் பழமாக இருக்கும்

ழுகிறார்கள். இவ்வாறு அமை யும் கொளுக்கட்டைகள் எல் லாமே ஒரே சுவையினைக் கொண்டதாகவும் இருப்பதில் லை. வெட்டி எடு க்கப்படும் பழுக்காத நிலையிலுள்ள பனம்பழத்தின் தன்மையினைப் பொறுத்தே இவற்றின் சுவையும் அமைகின் றது என்பது குறிப்பிடத் தக்கதாகும். சுவையும், நல்ல மணமும் உள்ளதிலிருந்து கிடைக்கும் கொளக்கட்டைகளும் நல்லசுவையினைத்தருவதாகவே இருக்கும் என்பது முக்கியம ாகும் தங்க நிற மும் , நல்ல ம ணமுள்ள கொளக்கட்டைகளை பானை களில் வைத்து நீர் கலந்து அவித்துப் பயன்படுத்தும் ஒரு முறையும் இங்கு காணப்படுகிறது. அதே வேளை அவிக்காமலும் பச்சையாகவே

(5ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர் Kalaikkathir

# கற்பகதரு என்னும் அற்புதம்.............

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கொளக்கட்டைகளைச் சுவைக்கும் நிலையும் காணப்படுகிறது என் பது நோக்கத்தக்கதாகும்.கொளக்கட்டை யில் இனிப்புக் குறைந்து, நிற மும் குறைந்து வரும்பொழுது அதற்கு மோர்க்காய் என்னும் பெய ரினைக் கொடுத்தார்கள் என்பதையும் அறியமுடிகிறது.இப்படி அழைப்பதோ, இப்படிச் சுவப்பதோஆனநிலைஇலங்கையில்இல்லை. அதே வேளை பனையினைப் போற்றிக் கொண்டாடும் யாழ்ப்பாணத் திலும் இல்லை என்பதும் கருத்திருத்த வேண்டியதேயாகும்.

பனம்பழம் என்றால் கறுப்புத்தான் என்று பொதுவாக எடுத்துக் கொள்ளுகின்றோம். பனம்பழங்களும் வெவ்வேறு நிறங்களிலும் இரு க்கின்றன என்பதையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். இப்ப டிப் பார்க்கின்ற பொழுதுபனம்பழங்கள்பனிரெண்டுவகையாக இரு ப்பது கண்டறியப்பட்டிருக்கிறது. இலங்கையில் புத்தளம், மண்டல் கண் டல், ஆலன்குடா, பகுதிகளில் இருக்கின்ற பனம் பழங்களில் தான் இத் தகைய வகைகள்

இருப்பதாக அறிந்திருக்கி றார்கள். அதே வேளையாழ்ப்பாண மாவட்டத்தில்தீவுப்பகுதி, வட மராட்சிப் பகுதிகளிலும் இப்படியான பனம்பழ வகைகள் இருக்கின்ற பொழுதிலும் நிறையவே இல்லாமல் அரிதாகவே இருப்பதாயும் அறிந்திருக்கிறார்கள். பனம் பழங்கள் கறுப்பு, சிவப்பு, மஞ்சள், செம்மஞ்சள், இளஞ்சிவப்பு என்று பல வண்ணங்களில் காணப்படுகின்றன என்பது விநோதாமாய் தென்படு கிறதல்லவா !

பனம்பழங்களுக்கும் ஏனைய பழங்களுக்கும் - உருவத்திலாகட்டும் , மணம் சுவையிலுமாகட்டும் வித்தியாசம் மிகுதியாகவே காணப்படு கிறது. சுட்டுச் சுவைக்கும் பழம் பனம்பழம் மட்டுமே. அதே வேளை பனம்பழத்தின் முக்கிய உள்ளடக்கமே அதில் நிறைந்திருக்கும் களித் தன்மையேயாகும்.அந்தக் களியில் ஒரு ஒருவித இனிப்பும் காறல் சுவையும் கலந்தே இருக்கும்.பச்சையாக சுவைத்துச் சாப்பிடும் பொழுது காறல் சுவையையும் இனிப்புச் சுவையும் நன்றாகவே உணர்ந்திட முடியும். சுட்டுச் சாப்பிடும் பொழுது காறல் சுவை சற்றுக் குறைந்து இனிப்புச்சுவை மேலேழுந்து மீண்டும் மீண்டும் உண்டு மகிழ்ந் திடவேதூண்டிநிற்கும்.இதனைஎழுத்தினாலோ அல்லது சொல்லினாலோ விளக்கிட முடியாது. சுவைத்துப் பார் த்தால்தான் உணர்ந்திடக் கூடியதாக இருக்கும் என்பது கருத்திருத்த வேண்டியதேயாகும்.

பனம்பழனங்களின் நிறங்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றில் காணப்படும் பழச்சாற்றின் தன்மை , அதில் இருக்கும் தும்பின் அளவு, அதனுடைய மணம், சுவை யாவற்றையும் அறிந்திருக்கிறார் கள். அப்படி அறிந்தவற்றைப் பார்க்கும் பொழுது எமக்கெல்லாம் ஆச் சரியமாகவே தென்படும்.சிவப்பு நிறமாய் இருக்கும் பனம்பழத்தின் சாறானது தோடம்பழ நிறத்தில் காணப்படுகிறதாம். இதில் தும்பின்தன்மை குறைவாயும்,சாறு மென்மையாகவும் , மணம்குறைந்ததாகவும் அதே வேளை இனிப்புள்ளதாகவும் காணப்படுகிறதாம்.சிவப்பு நிறம் கலந்த பிறவுண் நிறமாய் அமைந்த பனம்பழத்தின் சாறானதுமஞ்சள் நிறத்தைக் கொண்டிருக்குமாம்.இதிலுள்ள தும்பு பாரமானதாகவும் சாறு தடிப்பமானதாகவும், மணத்தைப் பொறுத்தளவில் சற்றுக் குறைந்தும்,காறல் சுவையானது அதிகமாய் காணப்படுமாம்.மஞ்சள் நிறத்திலிருக்கும் பனம்பழத்தினுடைய சாறு கடும் மஞ்சள் நிறத்தில் காண ப்படுகிறதாம்.அதில் இருக்கும் தும்பு பாரமானதாகவும், சாறு தடிப்பமா னதாகவும், மணம் உயர்ந்தும் காணப்படுகிறதாம். இப்படியான பனம் பழத்தில் காறல் சுவை குறைவாகவே இருகின்றதாம்.சிவப்புக் கலந்த மஞ்சள் நிறமான பனம்பழத்தில் காணப்படும் சாறானது தோடம்பழத்தின்நிறத்தில் இருக்கிறதாம்.இதில் உள்ள தும்பானது நடுத்தரமா யும், சாறு மென்மைத்தன்மை உடையதாகவும், மணம் உயர்வாயும், இனிப்புச்சுவை உள்ளதாகவும் இருக்கிறதாம்.



மேற்பக்கம் கறுப்பும் கீழ் சிவப்பும் கலந்து காணப்படும் பனம் பழத்தின் சாற்றின் நிறம் தோடம்பழத்தின் கடுமையான நிறத்திலிருக்குமாம்.தும்பானது நடுத்தர மாகாவும், சாற்றின் தன்மை மென் மையானதாகவும்,மணம் உயர்வாயும்,இனிப்பு நிறைந்ததாகவும் காண ப்படுகிறதாம்.முகப்பக்கம் கறுப்பாயும், கடுஞ்சிவப்புப்பும் தோடம் பழத்தின் நிறத்தையும் கொண்டிருக்கும் பனம்பழத்தின்சாறு தோடம்பழத்தின் நிறமாயும்,தும்பு பலமானதாயும்,சாறு தடிப்பானதாயும், மணமானது உயர்வானதாகவும் , இனிப்புச்சுவை உள்ளதாகவும் இருக்கிறதாம்.கூடுதல் சிவப்பும் தோடம்பழ நிறமும் பிறவுணாயும் இரு க்கும் பனம்பழத்தின் சாறு மஞ்சள் நிறமாயும்,தும்பு நடுத்தரமானதாயும், சாறுதடிப்பமுள்ளதாயும்,மணம்சிறிதளவாயும்,சுவையானது காறலாயும் காணப்படுகிறதாம்.கறுப்பு முகப்பும், அரைச் சிவப்பு,மஞ்சள் நிறம் கலந்து காணப்படும் பனம்பழமானது , தோடம் பழத்தின் நிற மான சாற்றினையும், தும்பு பாரத்தினையும், மென்மையுடைய தான சாற்றினையும், மணமானது விரும்பத்தக்கதாகவும், காறல் சுவை குறைவாக அமைந்ததாகவும் காணப்படுமாம்.கறுப்புத் தோலினை யுடைய பனம்பழம் கடும்மஞ்சள் நிறமான சாற்றினையும், பாரமான தும்பையும், தடிப்யான சாற்றையும், மணத்தைப் பொறுத்தளவில் சிறிதாயும், காறல் சுவையினை குறைவாகாவும் கொண்டு இருக்கி றதாம்.பனம்பழம் முழுவதுமே முழுக்கறுப்பாய் அமைந்திருக்கும் பழத்தின் சாறு மஞ்சள் நிறத்தில் இருக்குமாம். தும்பு பாரமான தாக வும், சாறு மென்மையானதாகவும்,மணமானது விரும்பும் விதமாகவும், சுவை இனிப்பாயும் அமைந்திருக்குமாம்.


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி

முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை

தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு

மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி

உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்

தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்

சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-

பரப்பு 20 இலட்சம்

தொடர்புகளுக்கு: 0777 43 5557

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 80/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swhppes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# எனது உயிருக்கு ஆபத்து வந்தால் ஜனாதிபதியும் அவரது ஆலோசகரும் பொறுப்புக் கூறவேண்டும்

## விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க சாடல்



எனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரத்நாயக்கவும் பொறுப்புக் கூற வேண்டும் என விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

நேற்று (திங்கட்கிழமை) நாடாளுமன்றத்தில் ஆற்றிய விசேட உரையின் போதே விளையாட்டுத் துறை அமைச்சர் ரொான் ரணசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

திருடர்களை அடையாளப்படுத்தியுள்ளதால் நான் பழிவாங்கப்படுகிறேன். எனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரத்நாயக்க பொறுப்புக் கூற வேண்டும். இந்த கருத்தை ஹன்சாட்டில் இருந்து நீக்க வேண்டாம் என்றும் விளைய-ாட்டுத்துறை அமைச்சர் ரொான் ரணசிங்க குறிப்பிட்டார்.

அத்துடன் என்னை நெருக்கடிக் குள்ளாக்க நிறைவேற்றுத்துறை செயற்படுகிறது. எனது பாதுகாப்பையும், எனது குடும்பத்தாரின்பாதுகாப்பையும் உறுதிப்படுத்துங்கள். வாழ விடுங்கள் என்றும் அமைச்சர் ரொான் ரணசிங்க சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

இதேவேளை, கிரிக்கெட் விவகாரத்தில்தோற்றம்பெற்றுள்ள பிரச்சினைக்குத் தற்போது தீர்வுகாணாவிடின், அடுத்தஜனாதிபதி தேர்தல் ஊடாக நான் தீர்வு காண்பேன் என்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் தெரிவித்தார். (05)

# வன விலங்குகளை வேட்டையாடிய வர்த்தகர் உட்பட நால்வர் கைது



புத்தளம் - நாகமடுவ பிரதேசத்தில் வன விலங்குகளை வேட்டையாடிய வர்த்தகர் உட்பட நால்வர் துப்பாக்கிகளுடன் கருவலகஸ்வெள வன விலங்கு அதிகாரிகளால் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் புத்தளம் பிரதேசத்தை சேர்ந்தவர்கள் ஆவர்.

குறித்த நபர்களிடமிருந்து 12 துப்பாக்கிகள், 4 வெற்றுத்தோட்டாக்கள் மற்றும் வேட்டையாடப்பட்ட விலங்குகளை கொண்டு செல்லப் பயன்படுத்தப்பட்ட கேப் ரக வாகனம் ஆகியன வனவிலங்கு அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட வர்த்தகருக்கு நாகமடுவ பிரதேசத்தில் காணி ஒன்று இருப்பதாகவும் ஒவ்வொரு விடுமுறை நாள்களும் அத் தோட்டத்திற்கு வந்து விலங்குகளை வேட்டையாடுவதாகவும் விசாரணையில் மேலும் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் தமிழ்நாட்டில் தஞ்சம்

## சுழிபுரத்திலிருந்து சென்றவர்கள்

யாழ்ப்பாணம் சுழிபுரம் பகுதியை சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 07 பேர் சட்டவிரோதமான முறையில் கடல் வழியாகத் தமிழகம் சென்றுள்ளனர்.

தனுஷ்கோடிக்கு அண்மித்த பகுதியில் திங்கட்கிழமை அதிகாலை தமிழக கடலோர பாதுகாப்பு பிரிவினர் அவர்களை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்த போது -

இலங்கையில் மிக மோசமான பொருளாதார நெருக்கடி காணப்படுவதால், தொடர்ந்து அங்கு வாழ முடியவில்லை என்பதால், தமிழகம் வந்துள்ளோம் எனவும், இதற்காக மன்னாரில் இருந்து தனுஷ்கோடி பகுதியில் எம்மை இறக்கி விட படகோட்டிக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் பணம் வழங்கியதாகவும் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிவித்துள்ளனர். (05)

# பல்பொருள் அங்காடிகள் மற்றும் வீடுகளில் திருடப்பட்ட 15 குளிரூட்டிகளுடன் மூவர் மாளிகாவத்தையில் கைது

கொழும்பில் உள்ள பல்பொருள் அங்காடிகள் மற்றும் வீடுகளில் பொருத்தப்பட்ட குளிரூட்டிகள் மற்றும் உதிரிப்பாகங்களை திருடும் மூவரடங்கிய குழுவொன்று கைக்குண்டுடன் கைது செய்-யப்பட்டுள்ளதாக மாளிகாவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 15 குளிரூட்டிகள், அவற்றைக் கழற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள், ஓட்டோ மற்றும் 10 கிராம் ஹெரோயின் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மாளிகாவத்தை பகுதியில் 10 கிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம் மாளிகாவத்தை பகுதியில் உள்ள இரண்டு பல்பொருள் அங்காடிகளில் குளிரூட்டிகள் திருடப்பட்ட இரண்டு சம்பவங்கள் தொடர்பிலான முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை மேற்கொண்டபோதே இவர்கள் கைது செய்யப்பட்டனர். (05)

# கோப்பாய் துயிலும் இல்லம் முன்பாக சுடரேற்றி அஞ்சலி

யாழ்ப்பாணம் - கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம் முன்பாக வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சிவாஜிலிங்கம் தலைமையிலான குழுவினர் சுடரேற்றி அஞ்சலி செலுத்தியுள்ளார்.

மாவீரர் நாளான நேற்று (திங்கட்கிழமை) மாவீரர்கள் நினைவாக சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. கோப்பாய் துயிலும் இல்லம் இராணுவத்தினரால் இடித்தது அழிக்கப்பட்டு, தற்போது இராணு-வத்தினரின் 51 ஆவது படைப்பிரிவின் தலைமையகம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)



காலைக்கதிர்
Kalaikkathir

## உண்மையைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கின்றன. பாதுகாப் புப் படைகளால்மேற்கொள்ளப்பட்டுவரும் வன்முறையானதுதனிநபர்களையும் அவர்களது குடும்பங்களையும் மட்டுமல்லாது, கூட்டுவாழ்வு, பாரம்பரியம், நம்பிக்கை ஆகியனவற்றைக் கட்டியெழுப்பும் சமூகக்கட்டமைப்பையும் சிதைக்கின்றது.

நவம்பர் 27 தமிழர் விடுதலைப் போராட்டத்தில் தங்கள் உயிர்களை இழந்தவர்களை நினைவுகூருவதற்கும் கவலைகொள்வதற்கும் தமிழ்க் குடும்பங்களுக்கு இருக்கும் நியாயமான உரிமைகளை இலங்கை அரசு தொடர்ந்தும் மீறிவருகின்றது.

2014ஆம் ஆண்டு முதல், ஆண்டுதோறும், சித்திரவதைகளிலிருந்து உயிர்தப்பி, வெளிநாடுகளுக்கு வந்தவர்களின் வாக்குமூலங்களைஎனதுநிறுவனம் ஆவணப்படுத்தியுள்ளது. இலங்கை புலனாய்வு அமைப்புக்கள் வடக்குக் கிழக்கில் நினைவு நிகழ்வுகளில் கலந்துகொள்பவர்களைப் படம்பிடித்து, பின்னர் அவர்களிடம் சென்று, அவர்களை அச்சுறுத்தியுள்ளன.

2022 நவம்பரில் வடக்கிலுள்ள கல்லறையொன்றில் நடந்த நிகழ்வில் உரையாற்றிய ஒருவரை நாங்கள் நேர்காணல் கண்டபோது, புதிய ஜனாதிபதி இவ்வாறான நிகழ்வுகள் நடைபெறுவதை அனுமதித்திருந்தமையால், உரையாற்றுவது பாதுகாப்பானது என்று தான் எண்ணினார் எனத் தெரிவித்தார். ஆனால், ஓரிரு நாட்களின் பின்னர், அவரது கருத்துச் சுதந்திரத்தையும், நடமாடும் சுதந்திரத்தையும் மீறும் வகையில், அவர் கடத்தப்பட்டு, சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார். அவர் தன்னுடைய புதிதாகப் பிறந்த குழந்தையையும் செழிப்பாக நடந்த வியாபாரத்தையும் கைவிட்டு, வெளியேறினார்.

'இந்த நினைவு நிகழ்வுகளுக்கு நிதியுதவி வழங்குவது' யார் என்று விசாரணைகளில் பாதுகாப்புப் படைகள் கேட்கின்றார்கள். இதில் முக்கியமான ஒரு விடயத்தை அவர்கள் தவறவிடுகின்றார்கள். நினைவேந்தல்களை ஏற்பாடு செய்வதும், அவற்றில் கலந்து கொள்வதும்வெறுமனேஎதிர்ப்பினை வெளிப்படுத்தும் செயல்கள் அல்ல, மாறாக, இக்கொடூரமான போரில் உயிர்தப்பிய அனைவராலும் உணரப்படும் தனிப்பட்ட துயரங்களின் வெளிப்பாடேயாகும்.

அரச ஆதரவு வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களும் பாதிக்கப்பட் டவர்களே; அவர்கள், தங்களது அன்புக்குரியவர்களின் காணமல் போதல்கள், சித்திரவதை அல்லது மரணம் ஆகியவற்றால் ஏற்படும் துன்பங்களுக்கு மேலதிகமாக, குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்களுக்குத் தண்டனையின்மையைகாண்பதுடன்.உயிர்ப்பழித்ததற்கான குற்றஉணர்ச்சியுடனும் வாழ்கின்றார்கள்.

உண்மைக்கும் நீதிக்குமான அவர்களது தேடலில், இறந்து போனவர்களையும் காணாமற் போனவர்களையும் தொடர்ந்து நினைவுகூருவது தங்களது தார்மீக மற்றும் சமூகப் பொறுப்பென உயிர்தப்பியவர்கள் கருதுகின்றார்கள். நவம்பர் 27இல் வெறுமனே அவர்களது குடும்பங்களும் நண்பர்களும் மட்டுமன்றி, மாறாக முழுச்சமூகமே அவர்களின் தியாகங்களையும் கூட்டுத் துன்பத்தையும் நினைவுகூருகின்றது.

உயிர்தப்பி வெளிநாடுகளுக்கு வந்ததமிழர்கள்பொதுஇடங்களிலும் தனியாகவும் இறந்தவர்களை நினைவுகூருவதற்கான தங்களது உரிமையினை மீளவும் பெற்றுக்கொள்வதை பல ஆண்டுகளாக நாம் கண்டிருக்கின்றோம்.

இந்தச் செயற்பாட்டில் உயிர்தப்பி, சாட்சியங்களாக இருப்பதன் நிதர்சனத்துடன் அவர்கள் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். எதிர்கால சந்ததிகளும் தெரிந்துகொள்ள வேண்டும்என்பதற்காகதாங்கள்பட்ட தனிப்பட்ட துன்பங்களை மட்டுமன்றி, தங்களதுசமூகங்களதுதுன்பங்களது நினைவுகளையும் உயிர்ப்புடன் வைத்திருப்பதற்காக புதிய வழிகளைத் தேடிக்கொள்கின்றார்கள்.

எந்தவொரு அடக்குமுறையும் இறந்தவர்களை நினைவு கூருவதற்கான மனிதனுடைய தேவையை, குறிப்பாக அது உங்களது பிள்ளையாவோ அல்லது பெற்றோராகவேஇருக்கும்பட்டத்தில், அடக்கிவிடப்போவதில்லை. போர் முடிந்த பின்னர், பூசாவில் தடுத்துவைக்கப்பட்டிருந்தபோது, சிறைக்காவலர்கள் பழிவாங்கு வாங்குவார்கள் என்பதை முழுமையாகத் தெரிந்திருந்தும், நவம்பர் 27அதிகாலையில்எழுந்துமெழுகுதிரி ஏற்றியதாகசித்திரவதையிலிலிருந்து உயிர்தப்பிவந்தஒருவர்விவரித்தார். இருப்பினும், அவர்களிடம் எஞ்சியிருக்கும்கடைசிசுயமரியாதை அதுவாகவே இருந்ததுடன், அதற்கான அந்த விலையைக் கொடுக்கவும்தயாராக இருந்தார்கள்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு ஒன்றினை அமைப்பது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேசுகின்றார். போரில் உயிர் தப்பியவர்கள் அவர்களுக்கிருக்கும் வருத்தப்படுவதற்கான உரிமையைக்கூட பயன்படுத்திக்கொள்ள முடியாதுள்ள, நினைவுநிகழ்வுகளில் கலந்துகொள்வதன் மூலமாக தங்களது மனவலிகளுக்கு ஆறுதல்தேடக்கூட முடியாதுள்ள சூழ்நிலையில், இவ்வாறான ஒரு அமைப்பில் உயிர்தப்பியவர்கள் கலந்துகொண்டு, தங்கள் வாக்குமூலத்தை வழங்குவது சாத்தியமல்ல.

உண்மயைக் கண்டறியும் ஆணைக்குழு நம்பகரமானதாகச் செயற்பட்டு, வெற்றியடைய வேண்டுமாக இருந்தால், அரச ஆதரவுடன் நடைபெறும் வன்முறைகள் நிறுத்தப்படுவதுடன், நவம்பர் 27 நடைபெறும் நிகழ்வுகளைப் பாதுகாப்புப் படைகள் கண்காணிக்காது விடுவது என்பதுடன், இவற்றை ஏற்பாடுகள் செய்பவர்கள் அல்லது பங்குபற்றுபவர்களுக்கு எதிராக எந்தவொரு பழிவாங்கும் நடவடிக்கையும் இருக்கவும்கூடாது.

இந்தஅடக்குமுறையைக்கண்டு இராஜதந்திரசமூகம்அமைதிகாக்காது இருப்பதுடன். சாதாரண உடைகளில் வரும் அதிகாரிகள் புகைப்படங்கள் எடுக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காக சர்வதேச கண்காணிப்பாளர்களையும் அனுப்பவேண்டும் என்றுள்ளது.

## அத்திப்பட்டி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்றாக கடலுக்குள் மூழ்கக் கூடியவாறு இந்த கனிய மணல் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கானதிட்டமிடல்கள் அரசின், அரச நிறுவனங்களின் ஆதரவோடு டைட்டானியம் சாம்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் துணை நிறுவனங்களோடு சேர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன.

மன்னார் மாவட்ட மக்கள் இந்த அகழ்வாராய்ச்சி பணியை நிறுத்தக்கோரி பாரிய ஆர்ப்பாட்டங்களை தொடர்ச்சியாக மேற்கொண்டுவருகின்றனர்.ஆனால் அரசு அபிவிருத்தி என்ற பெயரில் அல்லது அங்கே கனிய மணல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக இந்த ஆராய்ச்சிகளை தொடர்ந்து மேற்கொள்கின்றது.

இதனூடாக அங்குள்ள சாதாரண மக்களை ஏமாற்றி சுமார் 2000 முதல் 3000 ஏக்கர் வரையான காணிகளை அந்த மக்களின் வறுமைஇ அவர்களின் அறியாமையை பயன்படுத்தி அவர்களிடம்விலைபேசிஏறக்குறைய மன்னார் தீவில் மட்டும் 2600 மில்லியன் ரூபாவுக்கு காணிகள் வாங்குவதற்கான நடவடிக்கைகள் இந்த அமைப்புக்களினால் முன்னெடுக்கப்படுகின்றன.

ஆழ்துளைகிணறுகள்மூலமாக இந்த அகழ்வாராய்ச்சி பணிகள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது நிறுத்தப்பட்டாலும் அது தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

சுமார் 40 அடி ஆழத்தில் இந்த அகழ்வாராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இது ஒருகட்டத்தில் நிச்சயமாக நன்னீரும் கடல்நீரும்கலந்துகுடிநீர்பிரச்சினை ஏற்படுவதற்கான நிலையை உருவாக்குகின்றது.

இதனால் மன்னார் தீவு மக்கள் மிகப்பெரிய ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர். அரசு எந்த வகையில் இதற்கான அனுமதியை வழங்கியது என்பதுவே எமது கேள்வி.

தென்னிந்தியநடிகர்அஜித்நடித்த 'சிட்டிசன்' என்ற படத்தில் 'அத்திப்பட்டி' என்றகிராமமே காணாமல் போகும். அரசியல்வாதிகள் அதிகாரிகள் ஆகியோரின் ஊழல் மோசடியால் இந்த கிராமம் அழிந்தது.

கிராமத்திலிருந்து மக்களை வெளியேற்றி தமது சொந்த நலன்களுக்காக அரசியல்வாதிகள் அந்தக் கிராமத்தை முற்றாக்கக்கடலுக்குள் அமிழ்த்தி விட்டு செய்த ஒரு காரியம்தான் தற்போது மன்னார் தீவிலும் நடக்கின்றது.

இன்னும் ஒரு 50 வருடங்களுக்கு பின்னர் மன்னார் தீவு அங்கு இருக்காது. அப்படி ஒரு தீவு இருந்ததற்கான அடையாளங்களையேஇல்லாமல்செய்கின்ற திட்டத்திற்கு இந்த சுற்று சூழல் அமைச்சும் அரசும் உடந்தையாக இருக்கின்றன.

அரச அதிகாரிகளும் அது அரசின் உத்தரவு, மேலிட உத்தரவு எனக்கூறிக்கொண்டு வாய்மூடி மௌனிகளாக இருக்கின்றனர்.இந்த திட்டங்களை மன்னார் தீவு மக்கள் விரும்பவில்லை.

மீன் வளம் இல்லாது போகும் என மீனவர்கள் கூறுகின்றனர். எனவே இந்த அகழ்வாராய்ச்சி பணிகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். மன்னார் தீவு காப்பாற்றப்பட வேண்டும் என்றார்.

# விளையாட்டுத்துறை அமைச்சரின் அதிகாரங்கள் வெட்டிக் குறைப்பு

### எதிர்க் கட்சித் தலைவர் சபையில் கவலை தெரிவிப்பு



விளையாட்டுத்துறைஅமைச்சின் அதிகாரங்களை குறைத்து அமைச்சரவைக்குள்ளேயே அமைச்சர்ரொஷான்ரணசிங்கவுக்கு எதிராக சேறு பூசும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று விசேடகூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்நாடு சர்வாதிகாரியொருவராலோ அல்லது ஏகாத்திபத்தியொருவராலோ அல்லது மன்னராலோ ஆளப்படுவதில்லை.

நாடாளுமன்றம், நிறைவேற்றுத்துறை மற்றும் நீதித்துறை ஆகிய 3 தூண்களின் அடிப்படையில் தடைகள் மற்றும் சமநிலைகள் மூலம் இயங்கினாலும், விளையாட்டுத்துறை அமைச்சரின் அதிகாரங்களை குறைக்கும் அமைச்சரவை தீர்மானத்தின் ஊடாக விளையாட்டுத்துறை அமைச்சரின் சட்ட அதிகாரங்கள் சீர்குலைக்கப்படுகின்றன.

விளையாட்டுத்துறை அமைச்சர் மனசாட்சியுடன் கிரிக்கெட் தொடர்பாக சில முடிவுகளை எடுத்துள்ளார். இவ்வாறானதொரு பின்னணியில் விளையாட்டுத்துறை அமைச்சருக்கு எதிராக ஆட்சியாளர்களால் தற்போது பொய்யான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றது.

இவ்வாறான சேறுபூசும் பரப்புரைகளை மேற்கொள்ளாமல் அவர்கள்உண்மையில்கிரிக்கெட்டை நேசிப்பவர்களாகஇருந்தால்கிரிக்கெட் தொடர்பில் உள்ளக கணக்காய்வை நடத்த வேண்டும

அத்துடன்1973ஆம்ஆண்டின்25 ஆம்இலக்கவிளையாட்டுச்சட்டத்தின் 32 மற்றும் 33 ஆவது பிரிவின் ஊடாகஇடைக்காலக்குழுக்களையும் திறமையான அதிகாரிகளையும் நியமிக்க விளையாட்டுத் துறை அமைச்சருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.என்றாலும் 2023 நவம்பர்22ஆம்திகதிஅமைச்சரவை எடுத்த முடிவுகளின் மூலம் குறித்த அதிகாரங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான இடைக்கால குழுக்களை நியமிக்கும் பட்சத்தில் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டுத் துறை அமைச்சருக்கு விளையாட்டுச்சட்டத்தின் மூலம் கிடைத்த அதிகாரத்தின் பிரகாரம், முடிவெடுத்து தனது அதிகாரத்துக்கு உட்பட்டுசெயல்படும் திறன் இருந்தாலும்,

இது போன்ற அமைச்சரவை முடிவுகள் மூலம் செல்வாக்கு செலுத்தப்படுகிறது. இந்த அமைச்சரவைத் தீர்மானத்தைப் பார்க்கும்போது இது நல்லெண்ணத்தில் அமுல்படுத்தப்பட்ட செயற்பாடாக தெரியவில்லை.அத்துடன் சட்டத்தின் மூலம் விளையாட்டுத்துறை அமைச்சருக்குள்ள அதிகாரத்தை குறைப்பதற்கு அமைச்சரவையால் முடியுமாஎனக்கேட்கிறோம்.சட்டத்தை திருத்தும் ஏற்பாடுகள் இருந்தாலும் தேவையற்ற செல்வாக்குகளை பிரயோகிக்க அமைச்சரவைக்கு முடியாது.சட்டத்தை மாற்றி, சட்டரீதியாக விளையாட்டுத் துறை அமைச்சரின்உரிமைகள்குறைக்கப்படுவதை எதிர்க்கிறேன். விளையாட்டுத்துறை அமைச்சரின் அதிகாரங்களைஇவ்வாறுகுறைக்கஇடமளிக்க முடியாது என்றார்.

# விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் திடீர் பதவி நீக்கம்

### ஜனாதிபதி அதிரடி



ரொஷான் ரணசிங்க, நீர்பாசனம், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரம் ஆகிய அனைத்து விதமான அமைச்சுப் பதவிகளிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளதாகஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது குறித்த அமைச்சுக்களிலிருந்து அவரை நீக்குவதற்கான கடிதம் ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்டது. அதனையடுத்து அமைச்சரவைக் கூட்டத்தின் நிறைவில் ரொஷான் ரணசிங்கவிடத்தில் கையளிக்கப்பட்டது.

அரசியலமைப்பின் மூன்றின் 47(அ) பிரிவுக்கு அமைவாக, ஜனாதிபதிக்க காணப்படும் அதிகரத்துக்கு அமைவாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அனைத்தையும் முறையாக ஒப்படைக்கின்றேன். மிக்க நன்றிகள் என்று கூறிவிளையாட்டுத்துறை அமைச்சிலிருந்து வெளியேறும் போது ரொஷான் ரணசிங்க தெரிவித்தார

ஜனாதிபதியால் பதவி நீக்கப்பட்டதன் பின்னர் விளையாட்டுத்துறை அமைச்சிலிருந்துவெளியேறும்போது செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் முறையாக வெளியேறுகின்றேன். எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லை. நான் பதவிகளை எதிர்பார்க்கவில்லை. மீண்டும்இந்தஅமைச்சினைவகிக்க வேண்டும் என்றும் கருதவில்லை. மனித வாழ்க்கையில் எவையுமே நிரந்தமானவை அல்ல. நான் மக்கள் பணியாற்றுவதற்கு அமைச்சுப் பதவி அவசியமானதல்ல. நான் அமைச்சினைப் பொறுப்பெடுக்கும் போது போட்டோ பிரதி இயந்திரம் இல்லை, கமரா இல்லை ஆனால் இப்போது அவையெல்லம் உள்ளன. அவற்றைநான்முறையாககையளிப்பேன். அதற்கான செயலாளர்கள் உள்ளார்கள். ஆகவேமிக்கநன்றிகள் நான் வருகின்றேன் என்றார்.

## விளையாட்டுத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

வனஜீவராசிகள்மற்றும்வனவள பாதுகாப்புஅமைச்சுக்குமேலதிகமாக இந்தஅமைச்சுப்பொறுப்புஅவருக்கு வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

முன்னதாகவிளையாட்டுத்துறை அமைச்சர் பதவியில் இருந்து ரொஷான் ரணசிங்க நீக்கப்பட்டிருந்தார்.

## கிழக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலட்சத்து 50 ஆயிரம் பிளாஸ்டிக் இறக்குமதி செய்வதற்கு 27 ஆயிரம் கோடி ரூபா செலவிடப்படுகிறது. இவற்றில் 1 இலட்சத்து 30 ஆயிரம் பிளாஸ்டிக்தான் மறுசுழற்சி செய்யப்படுகிறது.

இந்த நிலைமை தொடர்ந்தால் எதிர்காலத்தில் மண்வளத்துக்கு பதிலாக பிளாஸ்டிக் மிகுதியாகும் அத்துடன் கடலில் மீன்களுக்கு பதிலாக பிளாஸ்டிக் போத்தல்கள் மிதக்கும்.

பாவனைக்குபின்னர் வீசப்படும் பிளாஸ்டிக்போத்தல்களைமீள்சுழற்சி செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். வெற்றுபோத்தல்களுக்கு விலை நிர்ணயிக்கப்பட வேண்டும்.

அத்துடன் போத்தல்களுக்கு நிரப்புவதை சட்டத்தின் ஊடாக தடுக்க வேண்டும். ஏனெனில் நிறமூட்டப்பட்ட போத்தல்களை மீள் சுழற்சி செய்வது 60 சதவீதமளவில் சாத்தியமற்றதாக உள்ளது.

முன்னாள் சுற்றாடற்துறை அமைச்சர் நஸீர் அஹமட் பதவி துறப்பதற்கு முன்னைய தினம் மாணிக்க கல் அகழ்வுக்காக 16 அனுமதி பத்திரங்களில் கைச்சாட்டுள்ளார். குறுகிய நேரத்துக்குள் இவ்வாறு அனுமதி வழங்குவது சுற்றாடற் துறை சட்டத்துக்கு முற்றிலும் விரோதமானது.

ராஜபக்ஷர்களின் ஆட்சியில் ஊழல் மோசடியில் ஈடுபட்டவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே நஸீர் அஹமட்கிழக்குமாகாணஆளுநராக நியமிக்கப்படலாம் என்ற சந்தேகம் காணப்படுகிறது.

16 அனுமதி பத்திரங்களுக்கு கைச்சாத்திட்ட பணிப்பாளர் நாயகம் எங்கு சென்றார் என்பது தெரியவில்லை. ஆகவேஇவ்விடயம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

## 3 நாள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண அரசியல் தரப்பினரைச் சந்தித்து உரையாடவுள்ளார்.

இரண்டாவதுமற்றும்மூன்றாம் நாளான 30ஆம் மற்றும் முதலாம் திகதிகளில் நயினாதீவுக்குச் செல்லவுள்ள அவர், நயினை நாகபூசனி அம்மன் ஆலயத்திலும், நாகவிகாரையிலும் வழிபாடுகளில் ஈடுபடவுள்ளார்.

தொடர்ந்து , யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் நூறு பேருக்கான புலமைப் பரிசில்களை கையளிக்கும் நிகழ்வுகளில்பங்கேற்கவுள்ளதோடு, தெரிவு செய்யப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு உதவிப்பொருட்களையும் கையளிக்கவுள்ளார்.

இதனைவிடவும், மதத் தலைவர்கள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இதேவேளை, டிசெம்பர் மாதத்துடன் உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே இலங்கைக்கான கடமைகளை பூர்த்தி செய்யவுள்ளார். அதனையடுத்து அவர் ஆஸ்ரேலியாவுக்கான உயர்ஸ்தா னிகராக நியமனம் பெற்றுள்ளார்.

இந்நிலையில், உயர்ஸ்தானிகர் கோபால்பாக்லேயின் வடக்கிற்கான இந்தப் பயணமானது பிரியாவிடையளிப்பதாகவும், தனது காலத்தில் கிடைக்கப்பெற்ற ஒத்துழைப்புக்களுக்கு நன்றிகளை செலுத்தும் முகமாகவும் இடம்பெறவுள்ளது. முன்னதாக, இந்திய வெளிவிவகார அமைச்சானது, பெல்ஜியத்தில் தூதுவராகக் கடமையாற்றி வரும் சந்தோஷ் ஜாவை இலங்கைக்கான தனது நாட்டின் புதிய உயர்ஸ்தானிகராக பெயரிட்டிருக்கிறது.



# முதலாவது மாவீரர் சங்கருக்கு வல்வையில் நேற்று அஞ்சலி





தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முதல் மாவீரர் சங்கர் என அழைக்கப்படும் சத்தியநாதனுக்கு ஈகைச்சுடரேற்றி இன்று அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறையிலுள்ள அவரது இல்லத்திற்கு முன்பாக ஈகச்சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாவீரர் பண்டிதரின் தாயார், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர் க.சதீஸ் உள்ளிட்டோர் கலந்துகொண்டு சுடரேற்றி அகவணக்கம் செலுத்தி அஞ்சலி செலுத்தினர்.

# யாழ். பல்கலைக்கழகத்திலும் மாவீரர் நாள் கடைப்பிடிப்பு





யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாவீரர் நாள் நினைவேந்தல் இன்று திங்கட்கிழமை (27) உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மாவீரர் நினைவுத் தூபியில் மாலை 6.05 மணியளவில் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் நினைவேந்தல் இடம்பெற்றது.

இதன்போது மாவீரர்கள் நினைவாக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. மூன்று மாவீரர்களின்தயார்ஒருவர்ஈகச்சுடரை ஏற்றிவைத்தார்.

# ரேவடி கடற்கரையிலும் நினைவேந்தல் நிகழ்வு



யாழ்ப்பாணம் - வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரையில் மாவீரர்களுக்கான நினைவேந்தல் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்றது.

கடலில் காவியமான தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகளுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக சுடரேற்றி கடலில் மிதக்க விடப்பட்டது.

இதன்போது மாவீரர் பண்டிதரின் தாயார், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், வல்வெட்டித்துறை நகரசபை முன்னாள் உறுப்பினர் க.சதீஸ் உள்ளிட்டோர் கலந்துகொண்டு அகவணக்கம் செலுத்தி அஞ்சலி செலுத்தினர். (05)





# எள்ளங்குளம் துயிலும் இல்லம் முன்பாகவும் உணர்வெழுச்சியுடன் மாவீரர் நினைவுநாள்

யாழ்ப்பாணம்வடமராட்சிஎள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லம் முன்பாக,

மாவீரர் நாளான இன்றைய தினம் உணர் வெழுச்சியுடன் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

எள்ளங்குளம்மாவீரர்துயிலும்இல்லம் இராணுவகட்டுப்பாட்டில்இருக்கும்நிலையில் துயிலும் இல்லத்திற்கு அருகில் உள்ள காணி ஒன்றில் அஞ்சலி நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

பிரதானஈகைச்சுடரினைகடற்கரும்புலி மாவீரர் தமிழினியின் தந்தையார் முத்துலிங்கம் சிவப்பிரகாசம் ஏற்றி வைத்தார்.

அதனை தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்கள் , சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள் என பலரும் கலந்துகொண்டு தாயக விடுதலைக்காக உயிர்நீர்த்த ஏனையவர்களுக்கு சுடரேற்றி மலர் தூவி கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர்.

# சாட்டியிலும் அஞ்சலி





யாழ். மாவட்டம் தீவகம், சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று மாவீரர் நாள் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டது.

மாவீரர்களின் பெற்றோர், மற்றும் உறவினர்கள் சாட்டி மாதா தேவாலயத்தில் இருந்து அழைத்து வரப்பட்டனர். தொடர்ந்து பொது ஈகச்சுடரை முன்னாள் போராளியும், இரண்டு மாவீரர்களின் தந்தையுமான வி.கந்தசுவாமி ஏற்றி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து மாவீரர்களுக்கு சுடர்கள் ஏற்றப்பட்டு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாவீரர்களின் பெற்றோர்கள் உறவினர்கள் முன்னாள் போராளிகள் அரசில்வாதிகள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்.

# யாழ் பல்கலையில் மாவீரர்நாள் வளைவு




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாவீரர் நாள் நினைவேந்தலை முன்னிட்டு தற்காலிகமான வளைவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

மாவீரர் வாரம் கடந்த செவ்வாய்கிழமை தொடங்கிய நிலையில், ஒவ்வொரு நாளும் பல்கலைக்கழகத்தில் நினைவேந்தல் இடம்பெற்று வந்தது.

# திலீபனின் தூபியிலும் அஞ்சலி





மாவீரர் நாளான நேற்று நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்திலும் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.


ஈகச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. இதன்போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர் க.சதீஸ் உள்ளிட்டோர் கலந்துகொண்டு சுடரேற்றி அகவணக்கம் செலுத்தி அஞ்சலி செலுத்தினர்.

JRIDE
BEYOND THE ROAD

# ஜே ரைட்

## ஒன்லைன் ரக்சி அப்

ONLINE TAXI APP FROM JAFFNA



ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.

## நாங்கள் தயாராகிவிட்டோம்!

யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)

உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.

இப்போது Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE



JRIDE TAXI SERVICE

SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
138, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

+94 21 222 8358

காலைக்கதிர் Kalaikkathir



# குற்றப்புலனாய்வுப் பிரிவு ரவிகரனிடம் விசாரணை

முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முள்ளிவாய்க்கால் மேற்கு கிராம அபிவிருத்தி சங்க தலைவர் வீரசிங்கம் ஆகிய இருவரிடமும் ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு குற்றப்புலனாய்வு பிரிவினரால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இரட்டைவாய்க்கால்பகுதியில்காட்சிப்படுத்தப்பட்ட பதாகையில் கார்த்திகை பூ இருப்பதாகவும், மாவீரர் நாள் என்ற சொற்பதம் இருப்பதாகவும் அதனை அகற்ற வேண்டும் எனவும் பொலிஸார் அவ்விடத்திற்கு சென்று முரண்பட்டிருந்தனர்.

அதனையடுத்து மக்களும், ஏற்பாட்டுக் குழுவினருமாக அதனை அகற்ற முடியா தெனவும் அதற்கான விளக்கத்தையும் கூறியிருந்தோம். இதனையடுத்தே குறித்த விசாரணை இடம் பெற்றுள்ளது.

இந்த விசாரணை தொடர்பாக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவிக்கையில் -

முல்லைத்தீவு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து ஒரு மணித்தியாலமாக விசாரணைகளை மேற்கொண்டு இருந்தனர்.

அந்த விசாரணையில் இரட்டை வாய்க்கால் பகுதியில் காட்சிப்படுத்தப்பட்ட கார்த்திகை பூ மற்றும் மாவீரர் நாள் என எழுதப்பட்டது தொடர்பாகவே வாக்கு மூலம் பெறப்பட்டிருந்தது.

நாம் நீதிமன்ற கட்டளைகளை மீறவில்லை இனியும் மீறமாட்டோம். நவம்பர் 27 எழுச்சியாக இடம்பெற இருக்கும் நாளை பொலிஸார் திட்டமிட்டு குழப்ப வேண்டும் என ஈற்றிலே விசாரணைக்கும் அழைத்து தீவிரமாக செயற்பட்டு வருகின்றனர்.

ஆனால்நாங்களும்எமதுஉரிமையை,நினைவு நாளினை நினைவு கூருவோம். தேவிபுரம், மாத்தளன், அளம்பில், முள்ளியவளை, முல்லைத்தீவு கடற்கரை, முள்ளிவாய்க்கால் போன்ற பல பகுதிகளில் குழப்ப நிலை ஏற்படுத்தப்பட்டது.

அத்தோடு மஞ்சள், சிவப்பு கொடிகளையே கட்ட வேண்டாம் என்ற நிலை தான் காணப்பட்டது. பொலிஸார் தாங்கள் நினைத்தது போல் , தங்களுக்கு ஏற்றால் போல் குழப்ப வேண்டும் என்ற நோக்கத்திலே செயற்படுகிறார்கள்.

முன் நின்று செய்பவர்களை பொலிஸ் நிலையம் அழைப்பதும் அவர்களுக்கு அழுத்தம் கொடுப்பதும் இடையூறுகள் ஏற்படுத்துவதுமே இவர்களது நோக்கமாகும்.

குழப்பநிலை எவ்வாறு இடம்பெற்றாலும் இறந்தவர்களது நாளை நினைவு கூருவோம். - என்றார். (05)

# யாழில் பிரதான மின் வடத்தில் தீ



யாழ்ப்பாணம் - கோப்பாய் பகுதியில் பிரதான மின் வடத்தில் (வயர்) தீ பற்றியமையால் சில மணி நேரம் அப்பகுதிக்கான மின்சாரம் தடைப்பட்டு இருந்தது.

கோப்பாய்,இராசவீதிபகுதியில்ஞாயிற்றுக்கிழமை மாலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பிரதான மின் வடத்தில் தீ பற்றியதைத் தொடர்ந்து, அப்பகுதி மக்கள் உடனடியாக மின்சார சபையினருக்கு அறிவித்ததை அடுத்து , சம்பவ இடத்திற்கு விரைந்த மின்சார சபை ஊழியர்கள் , மின்சாரத்தை துண்டித்து , மின் வடத்தில் பற்றிய தீயை அணைந்தனர்.

பின்னர்மீளஅவற்றைசீர்செய்துஅப்பகுதிக்கான மின்சாரத்தை வழங்கினர். குறித்த சம்பவத்தால் , அப்பகுதியில் சில மணிநேரம் மின் தடை ஏற்பட்டது. (05)

# உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சி, விற்பனை எருவிலில்









(வி.ரி. சகாதேவராஜா)

உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கான விற்பனை மற்றும் கண்காட்சி நிகழ்வானது நேற்று பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் நடைபெற்றது. மண்முனைதென் எருவில்பற்றுபிரதேசசெயலகத்துடன் இணைந்து சிறுதொழில் முயற்சி அபிவிருத்திபிரிவின்;ஒழுங்கமைப்பில் பிரதேச செயலக வளாகத்தில் இந்தக் கண்காட்சி இடம்பெற்றது.

பிரதேச செயலகப் பிரிவின் உள்ளூர் உற்பத்தியாளர்களால் செய்யப்பட்ட பொருட்கள் (தைத்த ஆடைகள், உள்ளூர் மரக்கறிகள், உணவு வகை கள், மரக்கன்றுகள், பாதணிகள், கைப்பணிப்பொருட்கள், மரத்தினாலான கைவினை பொருட்கள், பனை யோலை பொருட்கள், கைத்தறி) அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன், கணக்காளர் ரி. விக்னராஜா, நிருவாக உத்தியோகத்தர் வே. தவேந்திரன், பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு பொருட்களை கொள்வனவு செய்திருந்தனர்.

# தனது வீட்டினுள் நுழைந்த திருடனை மடக்கிப்பிடித்த சுகாதார பரிசோதகர்

## வவுனியாவில் இருவர் காயம்

வவுனியாவில் வீட்டினுள் நுழைந்து திருட முற்பட்ட நபர் ஒருவரை மடக்கிப்பிடித்த சுகாதாரப் பரிசோதகர் அவரைபொலிஸாரிடம்ஒப்படைத்தார்.

நேற்று (திங்னட்னிழமை)எஅதிகாலை 2 மணியளவில் வவுனியா தாண்டிக்குளம் சோயாவீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

நேற்று அதிகாலை குறித்த வீட்டிற்குள் திருடன் ஒருவன் நுழையமுற்பட்டதை வீட்டின் உரிமையாளரான சுகாதார பரிசோதகர் அவதானித்துள்ளார்.

இதனையடுத்து சுதாகரித்துக் கொண்ட சுகாதாரப் பரிசோதகரும் அவரது குடும்பத்தினரும், திருடனை மடக்கிப்பிடித்துமரத்துடன்கட்டிவைத்துநையப்புடைத்துள்ளனர். பின்னர் சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதுடன், திருடனை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

குறித்த சம்பவத்தில் திருடன் கத்தியால் தாக்கியதில் சுகாதாரபரிசோதகருக்கு காயம் ஏற்பட்டுள்ளதுடன்,அவரதுசகோதரரான ஊடகவியலாளர் ஒருவருக்கும் சிறுகாயம் ஏற்பட்டுள்ளது. அவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டட்டுள்ளனர்.

இதேவேளை கைதுசெய்யப்பட்ட நபர்மீதுநீதிமன்றில்வேறுவழக்குகளும் நிலுவையில் இருக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (05)

# 45 ஆயிரம் தொன் பிளாஸ்டிக் வருடம் ஒன்றுக்கு இறக்குமதி

இலங்கைக்கு வருடாந்தம் 45 ஆயிரம் தொன் பிளாஸ்டிக் இறக்குமதி செய்வதற்கு 27 ஆயிரம் கோடி ரூபா செலவிடப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர்அஜித்மான்னப்பெருமதெரிவித்துள்ளார்.

இந்த பிளாஸ்டிக் சிதைவதற்கு சுமார் 700 வருடங்கள் ஆகும் என நாடாளுமன்ற உறுப்பினர் நேற்று (திங்கட்கிழமை) நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த750,000தொன்பிளாஸ்டிக்கைமறுசுழற்சி செய்யாவிட்டால், இன்னும் பல ஆண்டுகளுக்கு இந்த நாட்டில் மண்ணே இருக்காது என்றும் அவர் கூறினார்.

முறையாக மறுசுழற்சி செய்யாவிட்டால் கடலில் உள்ள மீன்களை விட அதிக பிளாஸ்டிக் துண்டுகள் கடலில் மிதக்கும் என்றும் மன்னப்பெருமா கூறினார்.

ஒரு வருடத்தில் நான்கரை லட்சம் தொன் பிளாஸ்டிக் இறக்குமதி செய்யப்பட்டாலும், அதில் சுமார் 144,000 தொன்கள் மீண்டும் சேகரிக்கப்படுவதாகவும், ஆனால் அதன் பின்னரும் ஐம்பதாயிரம்தொன்களுக்கும்குறைவானபிளாஸ்டிக் மீள்சுழற்சிக்கு பயன்படுத்தப்படுவதாகவும் மன்னப்பெரும தெரிவித்தார். (05)

# சட்டவிரோத தொல்பொருள் அகழ்வில் ஈடுபட்ட இளைஞன் குருநாகலில் கைது

குருணாகல் - மொரகொல்லாகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றின் அறையில் சட்டவிரோத அகழ்வில் ஈடுபட்ட சந்தேகத்தில் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை மாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் மொரகொல்லாகம பிரதேசத்தைசேர்ந்த20வயதுடையஇளைஞராவார்.

மொரகொல்லாகம பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் குறித்த சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சோதனையின் போது அகழ்வுக்கான உபகரணங்கள் மற்றும் பூஜை பொருள்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

தப்பிச்சென்ற மூன்று சந்தேக நபர்கள் தொடர்பானதகவல்கள்கிடைத்தவுடன்அவர்களைக் கைதுசெய்வதற்கானநடவடிக்கைகளைமொரகொல்லாகம பொலிஸார் மேற்கொள்வார்கள். (05)

# 2,367 பிள்ளைகள் பிரபல பாடசாலைகளில் 3 வருடங்களில் சட்டவிரோதமாக அனுமதி

## ஜோஸப் ஸ்டாலின் சுட்டிக்காட்டு

கணக்காய்வாளர் திணைக்களத்தால் ஒக்ரோபர் மாதம் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, கடந்த 3 வருடங்களில் 2,367 பிள்ளைகள் பிரபல பாடசாலைகளில் சட்டத்துக்கு அப்பாற்பட்ட முறையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின்பொதுச்செயலாளர்ஜோஸப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே ஜோஸப் ஸ்டாலின் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2020 ஜனவரி 1 முதல் 2022 மே 31 வரையிலான காலப்பகுதியில் கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தால்மேற்கொள்ளப்பட்ட விசேட அறிக்கையில் மூலம் சட்ட வரையறைக்குஅப்பாற்பட்டவகையில் பிள்ளைகளை அனுமதிப்பதற்காக 3,308 கடிதங்களை கல்விச் செயலாளர் வழங்கியுள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது. - என்றார்.

அவற்றில் 72 சதவீத கடிதங்கள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம் உள்ளிட்ட அதிகாரிகளின் கோரிக்கைக்கு அமையவே வழங்கப்பட்டுள்ளதாகவும் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார். (05)

# காத்தான்குடியில் ஐஸ் போதைப்பொருளுடன் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைதானார்

25 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் காத்தான்குடியில் வைத்து ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணை பிரிவு பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் கடமை புரியும் வவுனியாவைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கிடைக்கப்பெற்ற தகவலொன்றையடுத்து புதிய காத்தான்குடி கர்பலா பகுதிகளில் வைத்தே ஐஸ் போதை பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரும் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் நீதிமன்றத்தில்ஆஜர்படுத்தப்பட உள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# பஸ் நடத்துநரின் கை விரல்களை வெட்டி 7,300 ரூபாய் கொள்ளையிட்ட கொடூரர்கள்

உடஹமுல்ல இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டிப்போவில் கடமையாற்றும் பஸ் நடத்துநர் ஒருவரின் விரலை கத்தியால் வெட்டிவிட்டு அவரிடமிருந்த 7,300 ரூபாவை கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளதாக இங்கிரிய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரே இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளமை விசாரணைகளில் தெரிய வந்தள்ளதாகவும் பொலிஸார் மேலும் கூறினர்.

காயமடைந்த நடத்துநர், இங்கிரிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# மக்கள் மீது வரிச்சுமையை அதிகரித்தாலேயே ஊழியர் கோரும் கொடுப்பனவை வழங்கலாம்

## பந்துல குணவர்தன கூறுகிறார்



ஊழியர்கள் கோரும் கொடுப்பனவை வழங்க வேண்டுமாயின் பொது மக்கள் மீது வரிச்சுமையை அதிகரிப்பதன் மூலம் மாத்திரமே அதனை செயற்படுத்த முடியும் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரச ஊழியர்களுக்கு 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவை பெற்றுத்தருமாறு கோரி போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் நிலையில் இதற்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்த உலகத்தில் உள்ள யதார்த்தத்தை இந்த நாட்டு மக்கள் புரிந்துகொள்ளாமல் இருப்பதை ஒரு துரதிஸ்டவசமாகவே நான் கருதுகின்றேன். அது இந்த இனத்தின் துரதிஸ்டவசம்.

2022ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த உள்நாட்டு வரி வருமானம் 1751 பில்லியன் ரூபா.

அதில் 1265 பில்லியன் ரூபா அரச ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் ஓய்வூதியம்.

வரி வருவானத்தில் சுமார் 72 வீதம் அரச ஊழியர்களுக்கான சம்பளத்திற்காகவே செலவிடப்பட்டுள்ளது.

1565 பில்லியன் ரூபா கடன் வட்டி கடன் வாங்கி செலுத்தப்பட்டுள்ளது.

இவை நான் கூறும் கதை அல்ல. நாட்டின் கணக்காய்வாளர் கணக்கிட்டு நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்த அறிக்கை.

ஆகவே இவர்கள் கோரும் கொடுப்பனவுகளை வழங்க வேண்டுமாயின் நாட்டு மக்கள் மீது பாரிய வரிச்சுமை ஒன்றை செலுத்த வேண்டும்.

தற்போது இருக்கும் நிலையைக் கருத்தில் கொண்டே 2000 ரூபா கொடுப்பனவை அதிகரித்து ஜனவரி மாதம் முதல் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவற்றை ஜனாதிபதியின் நிதியிலோ அரசியல்வாதிகளின் நிதியிலோ வழங்கவில்லை. இவற்றை பொதுமக்கள் செலுத்தும் வரியிலேயே வழங்குகின்றோம்.

நாங்கள் கொடுப்பனவுகளை வழங்க விரும்புகின்றோம். ஆனால் அவ்வாறு வழங்க வேண்டுமாயின் யாரிடமாவது எடுக்க வேண்டும்.

எனவே பொதுமக்களிடம் இருந்துதான் எடுக்க முடியும். ஏற்கனவே பொதுமக்கள் பரிய வரிச்சுமைக்கு மத்தியில் வாழ்ந்துகொண்டு இருக்கின்றார்கள்.

இதற்கு மேலும் எவ்வாறு பொதுமக்கள் மீது வரிச்சுமையை செலுத்துவது?' என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.(05)

# கைக்கடிகாரத்துக்குள் போதைக் கடத்தல்

ஒலுபொடுவ பிரதேசத்தில் சந்தேகநபர் ஒருவர் கைக்கடிகாரத்தின் பின் அட்டையினுள் ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்ததமைக்காக கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபரைக் கைதுசெய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் போது போதைப்பொருள் கடத்தும் புதிய முறை தொடர்பில் அறியக் கிடைத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்படி, சந்தேகநபர் ஹெரோயின் பொதிகளைக் கொண்டு செல்வதாக மொரகஹஹேன பொலிஸ் நிலைய கட்டளைத் தளபதிக்கு கிடைத்த தகவலுக்கு அமைய சந்தேகநபரைக் கைது செய்து தீவிர சோதனைக்கு உட்படுத்திய போதிலும் போதைப்பொருள் கண்டுபிடிக்க முடியவில்லை.

சந்தேகத்தின் பேரில், கைக்கடிகாரத்தின் பின் அட்டையை அகற்றியபோது, மூன்று போதைப்பொருள் பொதிகள் கவனமாக பொதிசெய்யப்பட்டிருந்ததை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர் எனத் தெரிவித்தனர்.

பன்னிபிட்டிய பிரதேசத்தை சேர்ந்த 33 வயதான ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் பல்வேறு பகுதிகளுக்கு போதைப்பொருள் பொதிகளை விநியோகித்துள்ளார் எனப் பொலிஸ் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இந்நிலையில், குறித்த சந்தேக நபர் பணத்திற்காக பெண்களை விற்கும் இடமொன்றின் முகாமையாளர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

சந்தேக நபர் ஹொரணை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட உள்ளதுடன் மொரகஹஹேன பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# டிசெம்பரில் நாடு வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டெழும்

## ரவி கருணாநாயக்க நம்பிக்கை




டிசெம்பர் மாதம் எட்டாம் திகதி நாடு வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டெழும் என முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கடந்த காலங்களில் முன்வைக்கப்பட்ட வரவு செலவு திட்டத்தை பார்கிலும் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள வரவு செலவு திட்டம் சிறந்தது.

வரவு செலவுத் திட்டம் என்பது எதிர்காலத்தின் வருமானம் மற்றும் காணப்படும் வளங்களை பயன்படுத்தி எவ்வாறு வருமானத்தை ஈட்டுவது போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டது.

அதனை இந்த வரவு செலவு திட்டத்தில் காண முடிகின்றது. இவ்வாறான சூழ்நிலையில் இதை விட சிறப்பாக செயற்படுவது நல்லது ஆனாலும் முடியாத பட்சத்தில் இதனை பெற்றுக்கொடுப்பது மதிப்பளிக்கக்கூடியது.

டிசெம்பர் எட்டாம் திகதி நாடு வங்குரோத்து நிலையில் இருந்து மீளும். அதனை நேக்கிய பயணத்தை தான் காணக்கூடியதாக இருக்கின்றது.

நாட்டின் வங்குநோரத்து நிலையை இல்லாதொழித்து முன்னோக்கி செல்ல வேண்டியது அவசியம்.

வங்குரோத்து நிலையை அறிவிப்பது ஒரு பகுதி அதனை சரிசெய்து அதிலிருந்து மீட்டெடுப்பது இன்னொரு பகுதி.

இவை எல்லாவற்றிலும் மக்களே பாதிக்கப்படுவார்கள் ஆகவேதான் மக்கள் வாழ்வாதாரத்தை கவனத்தில் கொண்டு அதனை இலகுபடுத்தி செயற்பட வேண்டும்' என அவர் மேலும் தெரிவித்தார். (05)

# சிறுவர் இல்லத்தில் 20 சிறுமிகள் துஷ்பிரயோகத்திற்குள்ளாகினர்

## அமைச்சர் கீதா குமாரசிங்க தகவல்

சிறுவர் இல்லமொன்றின் காவலாளியின் கணவரால், அந்த இல்லத்தில் இருக்கும் 20 சிறுமிகள் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என, இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

சிறுவர்கள் இல்லங்களில் இருக்கும் துஸ்பிரயோகத்திற்குள்ளான 169 பிள்ளைகள் இந்த வருடத்தில் இதுவரையில் அடையாளம்காணப்பட்டுள்ளனர்.

26 சிறுவர்கள் கர்ப்பிணிகளாக அடையாளம்காணப்பட்டுள்ளனர்.

மேலும் 13 சிறுவர்களை மலேசியாவிற்கு கடத்தி;சென்று உலகம் முழுவதும் விற்பனை நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றார்கள் என்ற செய்தி வெளியாகி இருக்கின்றது.

இது தொடர்பில் நாங்கள் உடனடியாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளோம்.

குடிவரவு குடியகழ்வு திணைக்களம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களங்களுக்கு அறிவுறுத்தியுள்ளோம்.

இது தொடர்பில் தேடிப்பார்த்து விசாரணைகளை ஆரம்பிக்குமாறு இன்று உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளோம்.

மேலும் சிறுவர் இல்லங்களைக் கண்காணிக்கும் நடவடிக்கை மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களத்தின் நன்னடத்தை மற்றும் அபிவிருத்தி அதிகாரிகளால் முன்னெடுக்கப்படுகின்றது.

அதேபோன்று பிரதேசங்களுக்குப் பொறுப்பான நன்னடத்தை அலுவலக அதிகாரிகளாலும் சிறுவர் இல்ல காண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்' என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# அபுதாபியில் கட்டடத்தில் இருந்து வீழ்ந்து யாழை சேர்ந்த நபர் சாவு

யாழ்ப்பாணத்தை சேர்ந்த நபர் ஒருவர் அபுதாபியில் கட்டடம் ஒன்றில் இருந்து தவறி விழுந்து படுகாயமடைந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

தெல்லிப்பழை, புளியடியை சேர்ந்த முருகேசு விஜயரத்தினம் என்ற 55 வயதான இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் தொழில் நிமித்தம் அபுதாபியில் வசித்து வந்த நிலையில் கடந்த ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி மூன்று மாடி உயர கட்டடத்தில் இருந்து தவறி விழுந்த நிலையில் படுகாயமடைந்துள்ளார்.

இதனையடுத்து அபுதாபியில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், தூதரகத்தின் உதவியுடன் வீட்டார் அவரை கடந்த 17ஆம் திகதி இலங்கைக்கு கொண்டு வந்து, யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர். இந்நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார். (05)

# விவசாயிகள் மற்றும் உணவுப் பொருள் உற்பத்தியாளர்களுக்கு விசேட செயலி

வட மாகாணத்திலுள்ள விவசாயிகள் மற்றும் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வோர், உற்பத்திகளுக்கான நியாயமான விலையை பெற்றுக் கொள்ளும் நோக்கில் 'வாயிலுக்கு பண்ணை' என்ற புதிய செயலியை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸின் பணிப்புரைக்கு அமைய செயலிக்கான மென்பொருள் வடிவமைப்பு செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு தை மாதம் 'வாயிலுக்கு பண்ணை' செயலியை அங்குரார்ப்பணம் செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த செயலி ஊடாக விவசாயிகளிடமிருந்து, நுகர்வோர் நேரடியாக தங்களுக்குத் தேவையான உற்பத்திகளை மொத்தமாகவோ அல்லது சில்லறை விலையிலோ கொள்வனவு செய்ய முடியும்.

அத்துடன் விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலையை பெற்றுக் கொள்ளவும், மரக்கறிகள், பழங்கள் மற்றும் ஏனைய உற்பத்தி பொருள்களைக் காலவதியாகும் முன்னர் விற்பனை செய்துகொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நுகர்வோரும் தரமான, புதிய உற்பத்திகளை நேரடியாக பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் இதன் மூலம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த செயலியில் விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்களின் தரவுகள் உள்ளடக்கப்பட்டிருப்பதுடன், உற்பத்தி பொருள்களை இலகுவாக பெற்றுக்கொள்ளக்கூடிய இடம், உற்பத்திகளின் தரம், கையிருப்பிலுள்ள அளவு, விலை உள்ளிட்ட அனைத்து விடயங்களும் தரவேற்றம் செய்யப்பட்டிருக்கும். இந்த விடயங்கள் அனைத்தையும் துறைசார் திணைக் களங்களின் கிராமிய மட்ட அலுவலர்கள் மேற்பார்வை செய்ய உள்ளதோடு, விவசாயிகளுக்கு தேவையான ஆலோசனைகளையும் வழங்கி அவர்களை ஊக்கப்படுத்த உள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# கொலைகளுடன் தொடர்புடைய சந்தேகநபர் பன்னலவில் கைது

மனிதப் படுகொலைகளுடன் தொடர்புடையவர் என சந்தேகிக்கப்படும் ஒருவர் பன்னல சந்தலங்காவ பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் எனவும் இவரிடமிருந்து ஜேர்மனியில் தயாரிக்கப்பட்ட ரிவோல்வர் ஆயுதம் மற்றும் கூரிய வாள் ஒன்றும் கைப்பற்றப்பட்டன எனவும் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

சந்தேகத்தில் கைதான 35 வயதுடைய நபர் மேலதிக விசாரணைகளுக்காக பன்னல பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (05)

# பாடசாலை மாணவர்களுக்கு டிசெம்பரில் காலணி வவுச்சர்

காலணி வவுச்சர் விநியோகம் டிசெம்பர் 4 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த நாடாளுமன்றத்தில்; தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட சபை உறுப்பினர் ஹோ விதானகே எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வவுச்சர் விநியோகம் எதிர்வரும் 27ஆம் திகதி நிறைவடையும் என்றும் 740,000 சிறார்களுக்கு வவுச்சர்கள் வழங்கப்படவுள்ளதாக தெரிவித்த அமைச்சர், இதற்காக மிகவும் கஷ்டமான மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.11.2023இல் வெளியிடப்பெற்றது.